விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது நான்கு — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 10 சனிக்கிழமை (27.08.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 251

ராம்கோ — RAMCO — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ரம்கோ சீமெந்து


## நிலைமைகளை ஆராய யாழ். வந்தார் கோத்தபாய

### படை அதிகாரிகளுடன் மந்திராலோசனை

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்புத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வட பகுதிப் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார். இவர் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து படையதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரானுக்கு இன்று தேர்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசாமி ஆலய தேர்த் திருவிழா இன்று நடைபெறுகின்றது. காலை வசந்த மண்டப் பூசை இடம்பெற்று 7 மணிக்கு முருகப் பெருமான் தேரில் ஆரோகணிப்பார்.

இத் தேர்த்திருவிழா வைபவத்திற்கு பல்வேறு பகுதிகளிலுமிருந்து இலட்சக்கணக்கானோர் கலந்து கொள்ளவுள்ளதால் கள்வர்களிடம் இருந்து பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை நேற்று மாலை நடைபெற்ற சப்பறத்திருவிழாவிலும் இலட்சக்கணக்கானோர் கலந்து கொண்டனர். பல்வேறு பகுதிகளிலும் இருந்து இம்முறை பலர் நல்லூர் கந்த சுவாமி கோவிலுக்கு வருகைதரவுள்ளனர். (எ)

## தமிழர்களுக்கு இடையில் முரண்பாடு-விக்கிலீக்ஸ்

(கொழும்பு)


யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் இலங்கை வாழ் தமிழர்களுக்கும், புலம்பெயர் தமிழர்களுக்கும் இடையில் முரண்பட்ட கருத்துக்கள் நிலவி வருவதாக விக்கிலீக்ஸ் இணையதளம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெட்ரிக்கா புட்டினாஸ் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

15.01.2010-ம் திகதி அமெரிக்கத் தூதரகத்திற்கும் அமெரிக்க ராஜாங்கத்திணைக்களத்திற்கும் இடையில் நடைபெற்ற தகவல் பரிமாற்றத்தின்போது இந்தத் தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

யுத்தக் (23ஆம் பக்கம் பார்க்க)

சப்பறத்தில் திருவீதியுலா வரும் முருகப்பெருமான்



## ஜப்பானிய பிரதமர் இராஜினாமா

(டோக்கியோ)

ஜப்பானிய பிரதமர் நவோடோ கான் இராஜினாமா செய்துள்ளார். இதன் மூலம், கடந்த 5 வருட காலத்தில் 6 ஆவது ஜப்பானிய பிரதமரை தெரிவு செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஜப்பானின் ஆளும் ஜனநாயகக் கட்சி புதிய தலைமைத்துவ தேர்தலை எதிர்வரும் திங்களன்று நடத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த மார்ச் 11 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமியை கையாண்ட விவகாரம் குறித்து நாவோடோ கான் கடுமையாக விமர்சிக்கப்பட்டதையடுத்து அவர் இராஜினாமா செய்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் மூவருக்கு செப்ரெம்பர் 9இல் தூக்கு

### சிறை நிர்வாகம் அறிவிப்பு

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத்தண்டனை உறுதிசெய்யப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவரும் செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி தூக்கிலிடப்பட வுள்ளதாக வேலூர் சிறை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இத்தகவல் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவருக்கும் தெரிவிக்கப்பட்டுவிட்டதாகவும்



முருகன் — சாந்தன் — பேரறிவாளன்

அவர்கள் தெரிவித்துள்ளனர். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு கடந்த 20 வருடங்களுக்கு மேலாக வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பேரறிவாளன், முருகன் மற்றும் சாந்தன் ஆகியோர் தமக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை நிறுத்தக்கோரி இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீலுக்கு கருணை மனுக்களை அனுப்பியிருந்தனர்.

இந்த (24ஆம் பக்கம் பார்க்க)

## நாவாந்துறையில் கைதானோர் நேற்றுப் பிணையில் விடுதலை!

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை கலவரத்தில் கைது செய்யப்பட்ட பொதுமக்கள் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியில் இராணுவம் மற்றும் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் கடந்த 22ஆம் திகதி இரவு 10.15 மணியளவில் முறுகல் நிலை ஏற்பட்டது.

கிறீஸ் மனிதன் என சந்தேகிக்கப்படும் நபர்களை பொதுமக்கள் துரத்திச்சென்ற போது அவர்கள். இராணுவ முகாமுக்குச் சென்று மறைந்ததையடுத்தே இந்த முறுகல் நிலை ஏற்பட்டது.

இந்த முறுகல் நிலையையடுத்து அப்பகுதியில் பெருமளவான இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டனர்.

பொதுமக்களினால் பொலிஸாரின் வாகனங்கள் இரண்டு சேதமாக்கப்பட்டதோடு நான்கு பொலிஸ் உத்தியோகத்தரும் காய மடைந்தனர். (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை!

(வாஷிங்டன்)

சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்களை அரசாங்கம் தொடர்ச்சியாக புறக்கணித்து வந்தால் சர்வதேச சமூகம் தலையிட வேண்டிய நிலை ஏற்படும் என அமெரிக்கா மீண்டும் எச்சரித்துள்ளது.

வாஷிங்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அத்துடன் அமெரிக்காவின் ஆசிய மற்றும் தென்மத்திய விவகாரங்களுக்கான பிரதி ராஜாங்க அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக் எதிர்வரும் 29ஆம் திகதி கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)




தனித்துவமான வர்ணங்களைக் கொண்ட டைல் வகைகளுக்கு

Metro Engineering (Pvt) LTD
No.212, Palaly Rd, Jaffna. 021 222 0044 / 021 222 0033
No.05, Stanly Rd, Jaffna. 021 222 4777 / 021 222 4888

## காயமடைந்தவர் நேற்று மரணம்

(யாழ்ப்பாணம்)

விபத்தில் சிக்கி வயோதிபர் ஒருவர் நேற்று மரணமாகியுள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி கோண்டாவில் டிப்போ வீதியில் சைக்கிளும் காரும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் படு காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

ஆயினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் இவ் வயோதிபர் நேற்று மரணமாகியுள்ளார். கந்தரோடையச் சேர்ந்த வி.கிருஸ்ணபிள்ளை (வயது 72) என்பவரே மரணமானவராவார். (எ-4)

# மக்களை அச்சுறுத்தும் இராணுவம் பீதியில் நாவாந்துறை மக்கள்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைப்பகுதியில் இராணுவத்தினர் தொடர்ந்தும் மக்களை அச்சுறுத்தி வருவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றார்கள்.

நாவாந்துறையில் கடந்த 22 ம் திகதி இரவு 10.15மணியளவில் பொதுமக்கள் மற்றும் பொலிஸ், இராணுவத்தினருக்குமிடையே ஏற்பட்ட முறுகல் நிலை கலவரமாக மாறியதோடு பொதுமக்கள் 100 பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 91 பேர் மருத்துவ பரிசோதனை முடிபுற்ற நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதற்கிடையில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் நாவாந்துறைப் பகுதியில் அதாவது கலவரம் இடம் பெற்றபகுதிக்கு அருகாமையில்உள்ள வீட்டினுள் நின்ற 24 வயது இளைஞனை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் அச்சுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக அந்த இளைஞனின் தாயான சி.திரேசம்மா தெரிவிக்கையில், எனது மகன் நேற்றுத் தான் (நேற்று முன்தினம்) மன்னாரிலி ருந்து வந்தான்.

ஆனால் இராணுவப் புலனாய்வுப்பிரிவினரோ நீ கலவரத்தில் ஈடுபட்டவன்தானே என கேட்டு அச்சுறுத்தியுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை சிங்கள மொழி பேசிக்கொண்டு தமது பகுதிகளில் இனம் தெரியாத நபர்கள் நடமாடுவதாகவும் தம்மிடம் வந்துபொருட்கள் வாங்கிக்கொண்டு சென்று அப்பகுதியில் பணியில் ஈடுபடும் இராணுவத்தினருடன் உரையாடுகின்றனர் எனவும் அப்பகுதியில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இப்பகுதி மக்கள் தொடர்ந்து அச்சுறுத்தப்பட்ட நிலையில் பயத்துடன் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்

அத்தோடு கலவரம் நடந்த நாளிலிருந்து தா்ம் வீடுகளில் உறங்குவதில்லை. கோயில்களில் சென்று தான் உறங்குவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (எ-6)

## இளைஞன் வெட்டிக் கொலை

உறவினர்கள் இருவருக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் நாரந்தனைப் பகுதியில். இடம் பெற்றுள்ளது. இச் சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது, உறவுமுறையான இருவர் பேசிக் கொண்டிருந்ததாகவும், திடீரெனச் சண்டை ஏற்பட்டு ஒருவர் மீது மற்றைய நபர் கத்தியால் வெட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த அவர் ஆட்டோ மூலமாக வைத்தியசாலைக்கு வரும் வழியில் உயிரிழந்துள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த போல் றொபின்சன் றொனிக் (வயது- 22) என்பவரே இச் சம்பவத்தில் பலியானவராவார். இவரை வெட்டிய நபர் தலைமறை வாகியுள்ள நிலையில் நாரந்தனைப் பொலிஸார் அவரைத் தேடி வலை விரித்துள்ளனர். மரணமானவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-8)



சண்முகனே சரணம்! சரணம்!
தேநீர், சிற்றுண்டி வகைகள், குளிர்பான வகைகள், பிஸ்கட் வகைகள் மற்றும் அனைத்து விதமான உணவு வகைகளையும், யாழ்ப்பாணம், கொழும்பு தமிழ், ஆங்கில நாளிதழ்கள், வார இதழ்களையும் பெற்றுக்கொள்ள
சிவ ஆனந்தா கபே
648, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
T.P:- 0217210692
சி-4187



Raveens English Medium Classes Karaveddy
மேற்படி நிறுவனத்திற்குரிய Grade 11
மாணவர்கள் பங்குபெறும்
IMPROMPTU ORATORY (ENGLISH)
and
PRIZE GIVING DAY
இடம்: யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி.
காலம்: 28.08.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00
தலைவர்: இ.இராகவன் (அதிபர்)
யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி
CHIEF GUEST
Dr. A.Ketheeswaran
Regional Director of Health Service(Northern Province)
ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.
ப.ஈஸ்வரநாதன்
(நிர்வாகி)


## மர்ம நபர் தாக்கியதில் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர் தாக்கி கீறப்பட்ட காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பகல் நடைபெற்ற இச்சம்பவத்தில் கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ணன் பாடசாலை வீதியைச் சேர்ந்த எஸ்.தா்மகுலசிங்கம் (வயது-55) என்பவரே இத்தாக்குதலில் காயமடைந்தவராவர்.

இந்நபர் நல்லூர்த் தேர்த்திருவிழாவை காண்பதற்காக கொழும்பிலிருந்து தனது சொந்த இடத்திற்கு குடும்பத்துடன் வந்திருந்தார்.

நேற்றைய தினம் கழிப்பறைக்குள் சென்ற போது அதற்குள் நின்ற நபர் இவரின் கண்ணையும் வாயையும் இறுகப்பொத்திய போதுஇவர் தன்னை விடுவிக்க முயற்சித்தார். இதன்போது இவ்வாறு கீறப்பட்ட பாரிய காயம் உண்டாகியது. ஆயினும் குறித்த மர்ம நபர் வேகமாக ஓடி மறைந்து விட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-4)







திருமுருகா போற்றி
தேர் ஏறிவரும் திருமுருகா போற்றி
திருவருள் தந்திடும் திருமுருகா போற்றி
நாம் போற்றும் நல்லைக்கந்தா திருப்பாதம் போற்றி
நலமுடன் நாம் இருக்க, நல்வழி காட்டும் திருமுருகா போற்றி
சாயிராம் வர்த்தக நிறுவனம்
101, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
எம்மிடம் குளிர்சாதன, குளிரூட்டி உதிரிப்பாகங்கள், மற்றும் சகல காஸ் வகைகளும் பெற்றுக் கொள்ளலாம்.
(5993)




MAYURAN'S-PHONE SHOP
மயூரன் போன் சொப்
Mobile Repairing, Service & Sales

இல. 06, கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்
தொ.இல.: 0212223137
No.06, K.K.S.Road
Jaffna.
Tel:-021 222 4356
(சி-4185)



தேரேறும் ஆறுமுகனே உன் அருட்காட்சி தாராய்!
இன்றைய நன்நாளில் எமது முதலாவது அகவையை கொண்டாடுவதை இட்டு பெருமகிழ்வடைகின்றோம்
TA Mobile & Computer System
ஸ்தாபனத்தினர்
1st Anniversary celebrate


- கணனிகள்
- மடிக்கணனிகள்
- பிரிண்டர்கள்
- சப் பூவர்கள்
- கணனி மேசைகள்
- கையடக்கத் தொலைபேசிகள்
- மேலும்பல கணனி சார் உபகரணங்களும் கணனி திருத்த வேலைகளும் சிறப்பாக செய்து தரப்படும்.





TA Mobile & Computer System
No. 03 Aaladi Junction, Manipay.
T.P.0212255213,0772622373



ரூ. 1.50
இந்தியா
கனடா
இங்கிலாந்து
அமெரிக்கா
நிமிட அடிப்படையிலான கட்டண முறையுடன் சர்வதேச
அழைப்புக்களை மேற்கொள்ள #678# க்கு அழையுங்கள்
www.dialog.lk/idd
செப்டெம்பர் 30ம் திகதி வரை மட்டுமே
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
பொருத்தமான வரிகள் சேர்க்கப்படும்
துரித அழைப்பு: 077 7 678 678
Dialog

தேரேறும் முருகா உன் அருள் தா மருகா!




கிளிநொச்சி நகரில் வியாபாரத்தை ஆரம்பித்து ஒரு வருட பூர்த்தியைக் கொண்டாடும் இந்நாளில் நல்லைக் கந்தன் அருள் வேண்டி நிற்கின்றோம்.

## இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்

ஏ-9 வீதி, கரடிப்போக்கு வீதி,
கிளிநொச்சி.

NIBM
BUILDING COMPETENCIES



## அடுத்த பிரிவுகள் ஆரம்பம்
## 11-09-2011

கணினி, முகாமைத்துவ, மொழி

கற்கை நெறிகள் பற்றிய தகவல்களுக்கு

நல்லூர் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள

எமது தகவல் மையத்தினையும் தொடர்புகொள்ளலாம்

**077 0716974**

AAA MOVIES
INTERNATIONAL
PRESENTS



## இன்று முதல்

## ஊரெல்லாம் நம்ம பாட்டுத்தான்...




நல்லூர்க் கந்தசுவாமி ஆலய
தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 2011.08.27


ARRUL GLOBAL EXPRESS
INTERNATIONAL COURIER & CARGO SERVICE
72 மணி நேரத்தில்
வெளிநாடுகளுக்கான கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவை
24 மணி நேரத்தில்
DHL
இலங்கையில் சகல பாகங்களிற்குமான கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவை.
உங்களால் அனுப்பப்படும் பொருட்கள் உரிய இடத்தை சென்றடையும் வரையான தகவல்களை கையடக்க தொலைபேசியில் இருந்தே அறிந்து கொள்ளலாம்.
05 Kg, 10Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு அதிவிசேட கட்டணச்சலுகை
சகல நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுக்கள், மற்றும் இணைந்த சேவைகள்
021 222 6113


Midea
PC Show Room
Midea
Electro Mart
தேரேறும் முருகா
உன் அருள் தா மருகா
Authorized Dealer for Abans Ltd.
Computers
Three Years
Warranty
நவீன முறையிலான வீட்டு மின்
இலத்திரனியல் உபகரணங்களை
ஒரே கூரையின் கீழ் Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோகத்தையும்
பெற்றிடலாம்
WARRANTY 5 YEARS
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.
NO.4, NEW MARKET CHAVAKACHCHERI.
Tel: 021-2270268
Fax: 021-2270129
e-mail:midea21@gmail.com
www.mideamart.com


நல்லூர் வேலவனின் இரத பவனி
பாரினில் சமாதானம் மலரட்டும்
Dulux
AkzoNobel
Tomorrow's Answers Today
பெயின்ற் வகைகளின்
யாழ்ப்பாண விநியோகஸ்தர்கள்
சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்
70/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்
கண்டி வீதி,
சாவகச்சேரி
சிவகுமரன் என்ரபிறைஸ்
75, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

# எனக்குத் தெரியவில்லை

ஒரு காட்டில் முனிவர் ஒருவர் இருந்தார். ஒருநாள் அவரைத் தேடி நான்கு பேர் சென்று, "சுவாமி எங்களுக்கு நீண்ட நாட்களாக ஒரு சந்தேகம்!" என்றார்கள்.

முனிவர், "என்ன?" என்று வினவினார். அதற்கு அவர்கள் "இந்த உலகத்தில் எவ்வளவோ காரியங்கள் நடைபெறுகிறது. எது நியாயம்... எது அநியாயம் என்று விளங்கவில்லை...!" என்றார்கள்.

"அதனை எவராலும் புரிந்துகொள்ள முடியாது!" என்றார் முனிவர்.

வந்தவர்கள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள்! உடனே முனிவர் "சரி... என்னுடன் புறப்படுங்கள்" என்றார்.

"எங்கே?" என்று கேட்டார்கள்.

இப்போது உங்கள் நாலுபேரையும் ஒரு புஸ்பக விமானத்திலே அழைத்துக் கொண்டு போய்... இந்த உலகத்திலே சர்வ சாதாரணமாக நடக்கக்கூடிய ஒரு காட்சியைக் காட்டப் போகிறேன். நீங்கள் பார்க்கப் போகிற அந்தக் காட்சி நியாயமா... அநியாயமா... என்பதைச் சொல்ல வேண்டும்.

நீங்கள் சரியான பதில் கூறினால், புஸ்பக விமானத்தில் தொடர்ந்து பயணம் செய்யலாம்.

தவறான பதில் கூறினால், இந்த புஸ்பக விமானம் உங்களைக் கீழே தள்ளிவிட்டு விடும்! என்றார்.

நான்கு பேருக்கும் பயமாக இருந்தாலும் முனிவர் கூப்பிட்டார் என்பதற்காக புறப்பட்டார்கள்.

அவர்கள் எல்லோரும் புறப்பட்டு ஒரு காட்டு வழியாக விமானத்தில் பயணித்துக் கொண்டிருந்தார்கள். அங்கே நடக்கிற ஒரு காட்சியை முனிவர் காட்டினார்.

ஒரு தாய்ப்புலி அப்போது தான் குட்டிகளை ஈன்று கொண்டு இருந்தது. அது குட்டிகளை ஈன்றவுடனே பசிக்கு இரை தேடி அந்தப்பக்கமாக வந்தது.

அதேநேரம்... ஒரு தாய் மான் அதுவும் அப்போதுதான் தனது குட்டிகளை ஈன்றுவிட்டு, இதே மாதிரி இரைதேடி அந்தப் பக்கமாக வந்தது.

புலி, அந்த மானை வேட்டையாடி சாப்பிட்டுவிட்டு தனது குட்டிகளுக்கும் கொடுத்தது.

இப்போது, அந்தப் புலிக்குட்டிகளின் முகத்திலே மகிழ்ச்சி. தாயை இழந்த அந்த மான்குட்டிகளின் முகத்திலே சோகம் குடி கொண்டிருந்தது.

அப்போது முனிவர் அந்த நான்கு பேரிடமும் கேள்விக் கணைகளைத் தொடுத்தார். "நீங்கள் இங்கே பார்த்ததில்... இதில் எது நியாயம்... எது அநியாயம்... ஒவ்வொருவராகச் சொல்லுங்கள். உங்கள் பதில் தவறென்றால், இந்த விமானம் உங்களைக் கீழே தள்ளி விடும். சொல்லுங்கள் பார்க்கலாம்!" என்றார்.

முதலில் ஒருவர் கூற ஆரம்பித்தார். அந்தப் புலி செய்தது சரிதான் அது பசிக்கும் போது அதற்கு அது தான் ஆகாரமாகக் கிடைத்தது. தன்னுடைய பசிக்குத் தானே இரை தேடியது அவ்வளவு தான்... அதனால் புலி செய்தது நியாயம் தான்! என்றார்.

அந்த விமானம் அவனைக் கீழே தள்ளிவிட்டது.

அதனாலே அந்தப் பதில் பிழையென்பது தெரிந்து விட்டது.

இரண்டாவது ஆள் கூற ஆரம்பித்தான்.

"புலி செய்தது கொடுமை... அந்தத் தாய் மான் என்ன பிழை செய்தது? இப்போது அந்தக் குட்டிகளுக்கு யார் ஆதரவு? அதனால் புலி செய்தது அநியாயம்!" என்றார்.

உடனே விமானம் அவனையும் கீழே தள்ளிவிட்டது. மூன்றாவது நபர் வந்தான்.

அவன் கூறினான்... இரண்டுமே நியாயம் தான். புலி இரையைத் தேடியதும் இயற்கை. அதற்கு மான் இரையானதும் இயற்கை! என்றான்.

அவனையும் விமானம் கீழே தள்ளிவிட்டது! கடைசியாக நாலாவது நபர் வந்தான்.

முனிவர் கேட்டார்... "நீயாவது சொல்... இந்தச் செயலில் எது நியாயம்" என்றார்.

அவன் தெளிவாகப் பதில் சொன்னான். "எனக்கு ஒன்றுமே தெரியவில்லை!" என்றான்.

அவனை விமானம் கீழே தள்ளவில்லை. சௌகரியமாக பிரயாணம் செய்தான்.

இதுதான் சரியான பதில் என்று முனிவர் உணர்த்தினார்.

இதிலிருந்து நாம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். இந்த உலகத்தில் எவ்வளவோ காரியங்கள் இடம்பெறுகிறது. அது ஏன் அப்படி நடக்கிறது. எப்படிப்பட்ட பண்டிதர்களாலும் பதில் கூறமுடியாது. தெரியாததை தெரியாது என்று தெளிவாகக் கூறினால், வாழ்க்கைப் பிரயாணம் சுகமாக இருக்கும்!

அதனால் தேவையில்லாத விடயங்களைப் புரிந்து கொள்வதற்கு நேரத்தை செலவு செய்யாதீர்கள்.

வாழ்க்கையைக் குழப்பாதீர்கள்...! வாழ்க்கைக்குத் தேவையானதை மட்டும் தெரிந்து வைத்தால் போதும்!

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# புதுக்குடியிருப்பு, கரைத்துறைப்பற்று பிரிவுக்குட்பட்ட மக்களை கோம்பாவிலில் மீள்குடியேற்ற நடவடிக்கை

## முல்லை. மாவட்ட செயலக திட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள முல்லைதீவு மாவட்ட புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட மக்களை கோம்பாவில் கிராமத்தில் விரைவில் மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலக திட்டப்பணிப்பாளர் திருமதி ஜெயபவானி கணேசமூர்த்தி தெரிவித்தார்.

மேற்குறித்த மக்களை மீள்குடியமர்த்தல் தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு, மந்துவில், மல்லிகைத்தீவு, சிவநகர், ஆனந்தபுரம் ஆகிய 6 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள மக்களும் கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு, அம்பலவன் பொக்கணை ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள மக்களுமே இவ்வாறு மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

மேற்குறித்த 9 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் கண்ணிவெடிகள் அகற்றப்படாமையினாலேயே கோம்பாவில் கிராமத்தில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவர்களின் மீள்குடியமர்விற்காக மீள்குடியேற்ற அமைச்சினால் 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு மீள்குடியேற்றத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள இடத்தில் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்தோடு மீள்குடியமர்விற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள இடத்தில் விவசாய குடும்பங்களுக்கு1/2 ஏக்கர் காணியும் மீனவ குடும்பங்களுக்கு 1/4 ஏக்கர் காணிகளும் நிரந்தரமாக வழங்கப்பட்டு அதில் தற்காலிக கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதோடு மலசல கூடம், கிணறு மற்றும் ஏனைய வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

கரைத்துறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள கேப்பாபுலவு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள மக்கள் அதே கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட வேறு காணிகளில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய உதவி அரசாங்க அதிபர்கள் மீள்குடியேற்ற மக்களுக்கான மேலதிக விளக்கங்களை அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-3)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 90 |
| தக்காளி | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 |
| கோவா | 30 | 80 |
| கரட் | 50 | 70 |
| பூசணி | 20 | 30 |
| புடோல் | 30 | 40 |
| வாழைக்காய் | 35 | 40 |
| சின்ன வெங்காயம் | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 85 | 90 |
| பாகற்காய் | 70 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 110 |
| பயற்றங்காய் | 90 | 120 |
| லீக்ஸ் | 50 | 60 |
| பீற்றூட் | 15 | 30 |
| கறிமிளகாய் | 35 | 60 |
| முருங்கைக்காய் | 100 | 120 |
| போஞ்சி | -- | 110 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 15 |
| தேசிக்காய் | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 |

## இராசி பலன்

*27.08.2011*
*(ஆவணி 10, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு*
*திரயோதசி பிற்பகல் 12.40 மணிவரை*
*பூசம் பிற்பகல் 3.07 மணிவரை*
*இராகுகாலம் 9.05-10.35 மணிவரை*
*சுபநேரம் 3.05-4.35 மணிவரை*
*நீலகண்ட சிவாச்சாரியார் குருபூசை,*
*நல்லைக் கந்தன் தேர்.*

**மேடம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், சுப காரியப் செலவுகள் அதிகரிக்கும், வள்ளிமணாளனை வழிபட்டு மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்** கௌரவம், அந்தஸ்து உயரும் நாள், தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், உடன் பிறப்புக்கள் உள்ளம் மகிழும் செய்தியொன்றைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

**மிதுனம்** குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும், கணபதி வழிபாடு காரிய வெற்றியைத் தரும், இனிய செய்தி இல்லம் தேடி வரும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபட வேண்டிய நாள், வைராக்கியத்தோடு செயற்பட்டு வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள், வெளியூர்ப் பயணமொன்றால் கையிருப்பு கரையலாம்.

**சிங்கம்** உறவினரைக் காண பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை அமையலாம், தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி** பொருளாதார நிலை உயர்வடையும் நாள், பயண வாய்ப்புக்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, விரதங்களில் நம்பிக்கை கூடும், உறவினர் வருகையுண்டு.

**துலாம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வந்து சேரலாம், எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், இனிய செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**விருச்சிகம்** மாலை நேரம் மகிழ்ச்சி தரும் விதத்தில் தொலைபேசி அழைப்புக்கள் வந்து சேரலாம், வெற்றி வாய்ப்புக்கள் வந்து சேர விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**தனுசு** மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், எதிர்பாராத விதத்தில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட இடமுண்டு, உடல் நலனில் கூடிய கவனம் எடுக்க வேண்டிய நாள்.

**மகரம்** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கும்பம்** கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள்.

**மீனம்** தொழில் வளர்ச்சி ஏற்படும் நாள், சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், பெரியவர்களின் ஆதரவு பெருகும் நாள், சொத்துக்களால் நன்மையுண்டு.

வளவன்

# நல்லூர்க் கந்தசுவாமி ஆலய
# தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 2011.08.27


நல்லூர் கந்தனவன் தேரோட ஒன்றிணைந்து வடம்பிடிப்போம்! அருள் ஒளியைப் பெற்றிடுவோம்!

நல்லூர்

அழகு வாய்ந்த
மலர்கள் தானே நீங்கள்! உங்கள் அழகு மலரட்டும்...

New Selection

**சரவணா புடைவையகம்**

NALLUR
**SARAVANA TEX**

526, 529, Pointpedro Road,
Nallur, Jaffna.
T.P.: 021 222 1723 Fax: 021 222 1723

770,772, K.K.S Road,
Thaddatheru Junction, Jaffna.
T.P.: 021 222 0421 Fax: 021 222 0421

Email: nallur.saravana@gmail.com

526, பருத்தித்துறை வீதி,
நல்லூர் வீதி(பின் வீதி), சிவன் கோயில் அருகில், யாழ்ப்பாணம்.

770,772, கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212220421

எல்லாம் வல்ல முருகனின் அருள் கிடைக்கட்டும்!

**தட்ஷா**

**அழகுக் கலையகமும் பயிற்சி நிலையமும்**

மணப்பெண் அலங்காரம் மணப்பெண்களுக்கான முக ஒப்பனைகள்
அனைத்துவகையான முக ஒப்பனைகள் சிறுவர், மகளிருக்கான
ஹெயர் கட்ஸ் & ஒயில் மசாஜ் மெனிகியூர், பெடிகியூர் & நக
அலங்காரம் (Nail Arts) பேர்மிங் (Perming),
ஸ்ரெயிற்னிங் (Straightening) றீ-பொண்டிங் (Re-Bonding)
& கலரிங் (Colouring)

Special Bridal Packages & Wedding packages are Available

இல. 84, ரவுன் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 9713, 077 33 83643 E-Mail: thadsha83@yahoo.com

வடிவேல் முருகனுக்கு சரணம்...!!!

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

**ரூபி நகை மாளிகை**

111/1 (227) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 222 2828
021 222 9038

இன்று தேர் உலா வரும் முருகனின் அருள் எல்லோருக்கும் கிடைக்கட்டும்!

**புதிய வினோ நகைமாடம்**

தங்கப்பவுன் நகை வியாபாரம்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
பிரதான வீதி (செலான் வங்கிக்கு அருகாமை)
சங்கானை T.P.: 0776002588

**Mobile Plaza**
**Phone Shop**
**மொபைல் ப்ளாசா**
**போன் சொப்**

Main Street, Chankanai
T.P.:0779352902 பிரதான வீதி, சங்கானை.

சேவற் கொடியோனே முருகா சரணம்! சேவடி காப்போனே முருகா சரணம்!!

**L கிருபா லேணர்ஸ் L**

(அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை)

- குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தி அடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- தாம் விரும்பிய நேரங்களில் வாகன பயிற்சி வழங்கப்படும்.
- சாரதி அனுமதி பத்திரத்திற்கான மருத்துவ சான்றிதழ் (மெடிக்கல்) எமது காரியாலயங்களிலே பெற்றுக் கொள்ளலாம்.

பெண்களுக்கு:
நவீன காரில் பயிற்சி
வழங்கப்படும்
021 492 3200 (கவிதா)

தலைமைக் காரியாலயம்:-
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P:- 021 222 4353

கிளை :- கிளிநொச்சி T.P:- 021 228 5505


கிளை :- நெல்லியடி T.P:- 021 300 6550

கிளை :- விசுவமடு T.P:- 021 320 1515

கிளை :- A-9 வீதி, சாவகச்சேரி
T.P:- 021 492 3202,
021 320 1818



# நல்லூர்க் கந்தசுவாமி ஆலய
# தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 2011.08.27




சண்முகனே சங்கடங்கள் தீர்த்தருவாய் முருகா!



## ஆர். வி.ஜி
மருந்தகம்
, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2129

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள்
மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும்
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## R.V.G
ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ. பே. இல : 021 222 6806


ஆறுமுக சாமிக்கு சரணம்!
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்
## அசோகா நகை அகம்
இல:111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6290



நம்பிக்கை நாணயம்–உத்தரவாதம்
22 கரட் தங்க நகைகளுக்கு
## ASOKA JEWELERS



தேரில் ஏறி தீவினைகள் அறுப்பாய் திருமுருகா!
சகல பாமசி & குறோசரீஸ் பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள



## றூபா பன் முக வர்த்தகம்
இல:104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:- 021 222 8330

இன்னல்கள் தீர்த்திடப்பா! தேரேறும் முருகா!!!
உடல் வளர்ச்சிக்கு
## ஜீவாகாரம்
உள்ளூர் உற்பத்தியான ஜீவாகாரம் சிறியோர் முதல் பெரியோர் வரை பாவிக்க உகந்தசத்துணவு. இரசாயனக் கலவை அற்றது





உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
### அண்ணா தயாரிப்புக்களே!




| | |
|---|---|
| அண்ணா கோப்பி | அண்ணா மிளகாய்த் தூள் வகைகள் |
| அண்ணா அரிசி மா | அண்ணா பத்தி வகைகள் |
| குரக்கன் மா | அண்ணா பற்பொடி |
| ஆட்டா மா | அண்ணா இனிப்பு வகைகள் |

## அண்ணா தொழிலகம்
இணுவில்
தொலைபேசி இல: 021 222 3565



MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
இன்று தேரேறும் நல்லைக்கந்தன்
அருள்வேண்டுகின்றோம்
## ராம்கோ சீமெந்து
## RAMCO CEMENT



ராம்கோ சீமெந்தை பயன்படுத்துங்கள்!
உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்!

ஆசியாவின் முதலாம் தர(நம்பர்-1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட RAMCO சீமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- ★ இலங்கையின் SLS 107 தரச்சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து
- ★ 50 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சீமெந்து
- ★ மிகமிக உயர்தரம் கொண்ட சீமெந்து
- ★ ISO 9001 உலகத்தர சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து

ராம்கோ சீமெந்தின் ஏக இறக்குமதியாளர்கள்
## ஐஸ்வர பகவான் அன் கம்பனி
தொ. பே: 021 222 2122,
021 222 2350
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# மற்றொரு கோணம்



## யோகா என்பது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது அல்ல உணர்வுகளுக்கு அப்பாற் செல்வது

**எல்லோரிடமும் கடவுள் இருக்கிறார். எல்லாமனிதர்களும் சமம் தான் என்று நீங்கள் அறிவுறுத்துகிறீர்கள், அப்படியிருக்கையில், உங்கள் பக்தர்கள் உங்களைப் புகழ்ந்து தள்ளுகிறார்கள். அதாவது தனியார் புகழ்ச்சியால் மகிழ்விக்கப்படுகிறீர்கள். இந்தப்புகழ்ச்சிகளை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? தனிமனித புகழ்ச்சி பற்றி நீங்கள் போதிக்கும் ஆன்மீகம் என்ன சொல்கிறது?**

### ஆன்மீகம் 23

ஒவ்வொரு மனிதரும் அவரது பார்வையில் உயர்ந்தவராகத் தெரிபவரைப்பற்றி நல்ல விதமாகப் பேசுவார்கள். சிலரை விமர்சனம் செய்வதும் சிலரைப் புகழ்வதும் எல்லோருமே செய்கிற செயல்தான். மற்றவர்களிடம் என்னென்ன நல்ல அம்சங்கள் இருக்கின்றன என்று பார்த்துப் பாராட்டுவது சிலரின் குணம். நல்ல குணங்களைப் பார்த்துப் பாராட்டித் தானும் அதுபோல ஆக நினைப்வர்கள் ஒரு வகை. ரோஜாச் செடியைக் காட்டினாலும் அது முள்ச்செடிதான் என்று வாதாடு பவர்கள் இன்னொருவகை. நீங்கள் யாரை யாவது பாராட்டினாலும்சரி திட்டினாலும் சரி அது அவர்களைப் பற்றியதல்ல உங்கள் தன்மையின் பிரதிபலிப்பு.

சிலருக்கு மேகத்தைப் பார்த்தால் கூட அதைக் கடவுள் என்று கும்பிடத் தோன்றுகிறது. சிலரோ மேகத்தைப் பார்த்து "முட்டாள் மேகமே! மழை கொண்டுவர மாட்டேன் என்கிறாயே" என்று அண்ணார்ந்து பார்த்து துப்புகிறார்கள். அவர்களுடைய எச்சிலே அவர்கள் மேலேயே விழுகிறது. இந்த இரண்டுமே அவரவர்களின் தன்மையைத்தான் வெளிப்படுத்துகிறது. அதற்காகத் தவறைக் கண்டிக்கக் கூடாது என்று அர்த்தமில்லை. ஏதேனும் தவறு நடப்பதை அறிந்தால், அதைத் திருத்துகிற கண்ணோட்டம் இருந்தால் நல்லது மாறாக அதை விமர்சிப்பதிலேயே வாழ்க்கையை கழிப்பது தவறான அணுகுமுறை. எனவே வாழ்த்துவதோ, விமர்சிப்பதோ அவரவர் தன்மையைத்தான் வெளிப்படுத்துகிறதே தவர எனக்கு அதில் விருப்பும் இல்லை. வெறுப்பும் இல்லை.

**சித்தர்களும் ஞானிகளும் சொன்னதைத்தான் நீங்களும் சொல்கிறீர்கள்.உங்கள் அனுபவத்திலிருந்து இந்தசமூகத்துக்கு நீங்கள் தரும் புதுக்கருத்து என்னென்ன?**

சித்தர்களும் ஞானிகளும் சொன்ன போதனைகளை நான் படித்ததில்லை. புராணங்களையும் கற்றதில்லை. என் உயிர்த்தன்மையின் அடிபடையான நிலை என்ன என்பதையும் அதன் உச்ச நிலை என்ன என்பதையும் நான் அறிந்திருக்கிறேன். எனக்குத் தெரிந்ததெல்லாம் இதுதான். எனக்குள் எது உண்மையோ அதுவே எல்லா மனிதர்களுக்கும் உண்மையாக இருக்க வேண்டும். ஏனென்றால் நான் எந்த விதமாக படைக்கப்படிருக்கிறேனோ அந்த விதமாகத்தான் நீங்கள் அனைவரும் படைக்கப்பட்டிருக்கிறீர்கள் அதே விதமாகத்தான் இந்தப் பிரபஞ்சமே படைக்கப்பட்டிருக்கிறது. எனவே போதனைகளையோ நம்பிக்கை முறைகளையோ படிக்க வேண்டும் என்றுகூட நினைத்ததில்லை. என் உள்த் தன்மையில் இருக்கிற துல்லியத்தின் அடிப்படையில் என் அனுபவத்தில் என்ன உள்ளதோ அதையே சொல்கிறேன். ஒவ்வொரு மனிதனும் இப்படி இருக்கவேண்டும் என்பதே என் ஆசை.



**மனிதன் என்றால் ஆசை, கோபம் விருப்பு, வெறுப்பு என அத்தனை உணர்ச்சிகளையும் அவ்வப்போது வெளிப்படுத்துவதனால்தான் அவன் மனிதன். ஆனால், "இதனை, அத்தனையும் அடக்கி ஆள யோகா கற்றுக் கொள்ளுங்கள் என்கிறார்கள். இது, இயற்கைக்கு எதிரானது இல்லையா? உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம், அவனுக்குள் ஆக்குரோசம்தான் உருவாகும் என்கிற கோட்பாடு குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

நீங்கள் எங்கே யோகா கற்றுக் கொண்டீர்களோ எனக்குத் தெரியாது. யோகா என்றால் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதல்ல உணர்வுகளைத் தாண்டிப் போவது. யோகா என்பது கட்டுப்பாடுகளிலிலிருந்தும் நிர்ப்பந்தங்களிலிருந்தும் உங்களுக்குச் சுதந்திரம் தருவது. ஒன்று யோகா பற்றி யாரோ தவறாக உங்களுக்குச் சொல்லியிருக்கிறார் கள் அல்லது நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் மனம், உணர்வு, செயல் ஆகியவற்றிலுள்ள நிர்ப்பந்தங்களுக்குள் கட்டுண்டு கிடக்கும் போது விலங்கு நிலையில் தான் இருக்கின்றீர்கள் வேண்டுமானால், மனிதவிலங்கு என்று சொல்லிக்கொள்ளலாம். விழிப்புணர்வோடு செயற்படும் போதுதான் விலங்கு நிலையைக் கடக்கிறீர்கள். கோபம், அச்சம் என்பதெல்லாம் மனித இயல்பு என்று நீங்கள் நினைத்தால் அது அறியாமை.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# தமிழ்... மொழி... சில பிற... பல

## தமிழ்...மொழி, மற்றும் சிறுபல விடயங்கள், பல சிறு விவகாரங்கள் சம்பந்தமான குறு ஆய்வு 11

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

**திராவிட தமிழ்த் தேசம்**

தனித் தமிழ்த்தேசம் என்கிற அடி எண்ணக்கருத்து தமிழரை இறும்பூதெய்த வைப்பதொன்று, என்பதில் வழக்கில்லை.

தமிழகத்தில் 1920 களிலேயே திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கையின் அடி, போடப்பட்டிருக்கிறது. டெல்ஹியின் மாநில சபைக்கு நியமிக்கப்பட்ட மலையாளியான சங்கரன் நாயர் 1926 இலேயே சென்னை இராஜ்யத்தின் பத்து மாவட்டங்கள் இணைக்கப்பட்டு ஒரு தனித் திராவிட- முக்கியமாகத் தமிழ் நாடு உருவாக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். "1929 இல் அறிவுசார் அரசியல்வாதி வி.கல்யாணசுந்தரர் முன்னைய காலங்களில் சுயஅரசு, கலாசாரம் வரலாற்று மகிமை - மரபு, மொழி என்று ஏற்றம் பெற்றிருந்த தமிழ்ருக்கென்று தனி நாடு கோருவது நியாயமானது என்று வாதித்தார்.

நீதிக்கட்சியென்றும் விளக்கப்பட்ட தென்னக விடுதலை அமைப்பின் தலைமையை மகோன்னத மனிதர் ஈ.வே.ராமசாமி ஏற்றார். 1920 இன் ஆரம்பகாலங்களிலருந்தே தன்மானம், சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவு என்று தமிழருக்கு ஏலவே பரிச்சயமில்லாத அழகறிவழகறிவான உச்ச வளர்ச்சி சிந்தனைகளை இராமசாமிப் பெரியார் வெளிப்படுத்தினார். சாதி, மூடநம்பிக்கை மூடமதிப்பின் தொடர்கை ஆகிய இழிவிடயங்களுக்கு எதிராக அன்றும் இன்றும் பெரியாரை மேவி எவரும் செயற்பட்டது கிடையாது.

1944 இல் திராவிடக்கழமாக மாறிய நீதிக்கட்சி (சி.என்.அண்ணாதுரை- செயலாளர்) யின் பெரும் தலைவர் பெரியார், 1938 இலேயே சென்னை நீதிக்கட்சி மாநாட்டில் (பெரியார், 37 இல் தலைவரானவர்) திராவிட நாடு என்னும் கோரிக்கையை முன் மொழிந்தார். இது 1940 இல் லாஹூர் மாநாட்டில் முகமட் அலி யின்னா பாகிஸ்தான் தனிநாட்டுக்கு வேண்டுகோள் விடுப்பதற்கு முந்தியது என்பது கவனிக்கத்தக்கது. ஆனால், சில பல தவறுகளால் திராவிடத் தனிநாடு மொழிதல் கைகூடவில்லை. 'ஆந்திர, கர்நாடக, கேரள மாநிலங்களையும் சேர்த்திணைத்து திராவிட நாடு' என்று கோருகிறபோது அந்தப் பிரதேசங்களது மொழி சார்ந்த தேசிய வாதத்தின் இறுக்கத்தையோ, சாதி-மத எதிர்ப்பு வாதத்தை முன்னெறிகிறபோது பெரிய அளவில்- எண்ணளவில் திராவிடர் மாறத்தயாரில்லை என்ற விடயத்தையோ பெரியார் பெரிய அளவில் கவனமாகக் கணக்கிடவில்லை. இது விட்யமாயிற்று திராவிடத் தனித் தேசத்திற்கு தவிரவும், பிரிட்டிஷார்- மதரீதியாக எதிர்க்கோஷமிட்டுக் கொண்டிருந்த கிழக்கு வங்காள தேசம், மேற்கு (பாகிஷ்தான்) பாகிஷ்தானிய முஸ்லிம்களுக்கு தனிநாடு கொடுப்பதிலான நியாயம் தென்னகத்தாருக்கு கொடுப்பதில் இல்லையென்று ஆழமாக நினைத்திருந்ததும் தனித்தமிழ் நாட்டுக் கேள்விக்கு சத்துரு ஆகியது.

இந்தியா ஒரு செயற்கை நாடு என்று கூறுவார் உளர். நூற்றுக் கணக்கான குறிஞ்சி இராஜ்யங்களையும், இனப் பிரதேசங்களையும், கூட்டங்களையும் நிர்வாக வசதிக்காக பிரிட்டிஷ்காரர் இணைத்ததன் விளைவு தான் பாரதநாடு. இந்த நாடு தொடர்ச்சியாக ஒரே இந்தியம் என்ற தேசிய வாதத்துடன். இருக்குமோ என்பதும் வினாவே.

### சிறீனோ சிறீ-சிறீசு


சாதிப் பிரச்சினையைப் பார்க்காதது எத்தகைய தவறோ, அதே போல மக்களனைவரையும் வெறும் சாதிகளாக மட்டும் பார்ப்பதும் தவறே. மக்கள் ஒரே நேரத்தில் தலித்களாகவும், விவசாயக் கூலிகளாகவும், தோல் தொழிலாளர்களாகவும் இன்னும் பல அடையாளங்களுடனும் உள்ளனர். அதே போல தலித் அல்லாதவர்களுக்கும் பல அடையாளங்கள் உள்ளன. இவற்றை முரட்டுத்தனமாகப் புறக்கணிப்பதில் பொருளில்லை. மார்க்சியம், பெரியாரிசம் முதலானவற்றை தலித்தியத்தின் இணைப் பிரதிகளாகவே கருத வேண்டும் என்ற ஒரு நிலை இடையில் உருவான போது பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. எனினும் தற்போது இத்தகைய நிலை இல்லாதது மகிழ்ச்சியளிக்கிறது.

அ. மார்க்ஸ்

(முற்றும்)



# நல்லூர்க் கந்தசுவாமி ஆலய
# தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 2011.08.27




அழகு முருகா உந்தனுக்கு பல்கோடி வந்தனங்கள்!

அழகுக்கு அழகு செய்யும் நவீன அழகிய டிசைன்களில் தங்க, வைர
நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்



தரம் நாடுவோர்
தவறாமல் நாடுமிடம்



## ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்

இல:10, பஸ் நிலையம், சங்கானை



தேரேறும் ஆறுமுகனே சரணம் சரணமப்பா!



## V.S.P லக் ஒயில்

தயாரிப்பாளரும்
ஏக விநியோகஸ்தரும்

## பரிமளா ஸ்ரோர்ஸ்

இல:26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 0212224135, 0212229165



தேரேறும் முருகா உன் பாதம் சரணம்!

# J.T ரான்ஸ்போட்

யாழ் → கொழும்பு
கொழும்பு → யாழ்



சகல விதமான பொருட்களும் நியாயமான
கட்டணத்தில் கொண்டு வந்து தரப்படும்





40 வருடகால மதிப்போடு விளங்கும்

## யாழ். வணிக நிலையம்
## Jaffna Traders

இல.336, 338, (மேல்மாடி) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

குழந்தைகளின் பால்மா, பிஸ்கற் வகைகள், பெண்களுக்கான கிறீம் வகைகள்,
குளிரூட்டப்பட்ட அங்கர்பட்டர், மாஜரின் வகைகள், குரக்கன், எள்ளு, தேயிலை
மற்றும் சகல வகைப் பொருட்களையும் ஒரே இடத்தில் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

## J.T ரான்ஸ்போட்

இல.302.ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# மீண்டும் இலங்கை-இந்திய ஒப்பந்தம் உருவாக வாய்ப்பு

## பேராசிரியர் சானக ஜயசேகர தெரிவிப்பு

மீண்டும் இலங்கை- இந்திய ஒப்பந்தம் செய்து கொள்ளப்படலாம் என அவுஸ்திரேலியாவின் சிட்டினி மெக்யூரி பல்கலைக்கழகத்தின் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வு தொடர்பான பேராசிரியர் சானக ஜயசேகர தெரிவித்துள்ளார்.

1977-1987 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தததை போன்றதொரு காலம் மீண்டும் உருவாகியுள்ளது.

மத்தியில் ஆட்சி அமைப்பதற்கு தமிழகத்தின் ஆதரவு மிகவும் அவசியமானது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதான மக்களின் நன்மதிப்பு குறைவடைந்து செல்கின்ற நிலையில் பாரதீய ஜனதா கட்சியும் காங்கிரஸ் கட்சியும் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி வைத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றது.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் குறித்த இரண்டு பிரதான கட்சிகளும் தமிழக மாநில ஆட்சியாளர்களின் ஆதரவினை கோர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக தமிழக ஆட்சியாளர்கள் மத்திய அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஜெயலலிதா அரசாங்கம் இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்து பிரயோகிக்கும் அழுத்தங்கள் மத்திய அரசாங்கத்தினை பாதிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவைப் போன்றே தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஜெயலலிதா அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளின் மனித உரிமை மீறல் தொடர்பான அழுத்தங்களும் தமிழக அரசாங்கத்தின் அழுத்தங்களும் இந்திய மத்திய அரசாங்கத்தின் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடும்.

எனவே எதிர்வரும் காலங்களில் மற்றுமொரு இந்திய- இலங்கை ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-4)

# பதுளை சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் மீது தாக்குதல்

(கொழும்பு)

பதுளை சிறைச்சாலையில் கைதிகளுக்கு இடையில் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சில அரசியல் கைதிகள் காயமடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை மோதல் சம்பவம் குறித்து இலங்கை சிறைச்சாலை திணைக்களம் இதுவரையில் எவ்வித உறுதிப்படுத்தல்களையும் வெளியிடவில்லை.

சிறுமோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாகவும் இது வழமையான சம்பவங்களில் ஒன்று எனவும் சிறைச்சாலைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மோதல் சம்பவம் பற்றியோ, மோதல் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பற்றியோ இதுவரையில் எதுவிதத் தகவல்களும் வெளியிடப்படவில்லை. (ஶ்ரீ-4)

# இராணுவத்தினரும் பொலிசாரும் எவரையும் விரும்பியவாறு கைது செய்யமுடியாது

## சிங்கள ஊடகம் தெரிவிப்பு

இராணுவத்தினரும் பொலிஸாரும் நினைத்த மாதிரி எவரையும் கைது செய்யமுடியாது என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நீண்ட காலமாக அமுல்படுத்தப்பட்டு வந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதனைத் தொடர்ந்து இராணுவத்தினரோ அல்லது பொலிஸாரோ எவரையும் விரும்பியவாறு கைது செய்ய முடியாது என சட்டத்தரணி புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் நாட்டின் சாதாரண பொதுமக்களை இராணுவத்தினர் கைது செய்ய முடியாது. எவரையேனும் கைது செய்ய வேண்டுமாயின் பொலிஸாருக்கு போதியளவு சாட்சியங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

கைது செய்யப்படும் நபர்கள் 24 மணித்தியாலத்திற்குள் நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டும் எனவும் கைது செய்யப்பட்ட நபர்களை நீண்ட காலத்திற்கு தடுத்து வைக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் நடத்தும் போராட்டங்களின் போது பொலிஸார் தலையீடு செய்ய முடியும் என்ற போதிலும் எவரையும் கைது செய்ய முடியாது.

கடந்த 30 ஆண்டுகளாக அவசரகால சட்டத்திற்கு பழக்கப்பட்ட இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் சாதாரண சட்டங்கள் பற்றி விளக்கம் அளிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஶ்ரீ-2)

## தேசிய கல்வி நிறுவக ஆசிரிய மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா 1 ஆம், 2 ஆம் வருட ஆசிரிய மாணவர்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதியே மீண்டும் வகுப்புக்களுக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

அன்றைய தினம் ஒப்படைகளையும் ஒப்படைக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளரும் யாழ். தேசிய கல்வி நிறுவக பிராந்திய இணைப்பாளருமாகிய திருமதி த.வில்வநாதன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஶ்ரீ)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.08 27

★ 1689-ரஷ்யாவுக்கும் சீனாவின் சிங் பேரரசுக்கும் இடையில் நெர்ச்சின்ஸ்க் உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1776-பிரித்தானியப் படைகள் லோங் தீவில் ஜோர்ஜ் வோஷிங்டன் தலைமையிலான அமெரிக்கப் படைகளைத் தோற்கடித்தன.

★ 1813- ஆஸ்திரியா, ரஷ்யா மற்றும் புரூசியா படைகளை நெப்போலியன் டிறெஸ்டென் என்ற இடத்தில் தோற்கடித்தான்.

★ 1816-அல்ஜியேர்ஸ் மீது பிரித்தானியா குண்டுத் தாக்குதலை மேற்கொண்டது.

★ 1828-ரஷ்யப் படை அக்கால்சிக் என்ற இடத்தில் துருக்கியப் படைகளை வென்றது.

★ 1828- பிரேசிலுக்கும் ஆர்ஜெண்டீனாவுக்கும் இடையில் இடம்பெற்ற சமரசப் பேச்சுக்களில் உருகுவாய் தனிநாடாக அறிவிக்கப்பட்டது.

★ 1859-பென்சில்வேனியாவின் டிட்டுஸ்வில் என்ற இடத்தில் பெற்றோலியம் கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே உலகில் வெற்றிகரமாகத் தோண்டப்பட்ட முதலாவது எண்ணெய்க் கிணறு ஆகும்.

★ 1881- புளோரிடாவில் இடம்பெற்ற சூறாவளியினால் 700 பேர் வரையில் உயிரிழந்தனர்.

★ 1883-இந்தோனேசியாவில் கிரகட்டோவா எரிமலைத் தீவு வெடித்ததினால் உருவாகிய ஆழிப்பேரலையினால் ஜாவா, சுமாத்திரா தீவுகளில் பல இடங்கள் அழிந்தன. கிட்டத்தட்ட 36 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1893- ஐக்கிய அமெரிக்காவில் கடல் தீவுகளில் இடம்பெற்ற சூறாவளியில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

★ 1896-ஆங்கிலோ- சன்சிபார் போர்: ஐக்கிய இராச்சியத்துக்கும் சன்சிபாருக்கும் இடையில் இடம்பெற்ற போர் உலகின் மிகக் குறைந்த நேரத்தில் (09:02-09:40) நிகழ்ந்து முடிந்த போராகும்.

★ 1916-முதலாம் உலகப் போர்: ருமேனியா ஆஸ்திரியா-ஹங்கோரியுடன் போரை அறிவித்தது. இது பின்னர் ஜேர்மனி, பல்கேரியப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டது.

★ 1921-1916 இல் ஒட்டோமான் பேரரசுடன் போரிட்ட செரீப் உசைன் பின் அலி என்பவரின் மகனை பிரித்தானியா ஈராக்கின் மன்னனாக ஈராக்கின் முதலாம் பைசல் என்ற பெயரில் அறிவித்தனர்.

★ 1928-போருக்கெதிராக கெலொக்- பிறையண்ட் உடன்பாட்டில் 60 நாடுகள் கைச்சாத்திட்டன.

★ 1939-உலகின் முதலாவது ஜெட் விமானம் Heinkel He 178 சேவைக்கு விடப்பட்டது.

★ 1943-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படைகள் நியூ ஜோர்ஜியா தீவை விட்டு விலகினர்.

★ 1952-லக்சம்பேர்க்கில் மேற்கு ஜேர்மனிக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் போர் நட்டஈடு தொடர்பாக உடன்பாடு ஏற்பட்டது. இதன்படி ஜேர்மனி 3 பில்லியன் டொச்சு மார்க்கை நட்டஈடாகச் செலுத்த ஒப்புக் கொண்டது.

★ 1957-மலேசியாவின் அரசியலமைப்பு சாசனம் அமுலானது.

★ 1962-நாசா மரைனர் 2 விண்கலத்தை வீனஸ் நோக்கி செலுத்தியது.

★ 1975-போர்த்துக்கீசத் திமோரின் ஆளுநர் அதனாட்சியை கிளர்ச்சியாளர்களிடம் கைவிட்டு தலைநகர் திலியை விட்டு அட்டாவுரோ தீவுக்குத் தப்பி ஓடினார்.

★ 1979-அயர்லாந்தில் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்த மவுண்ட்பேட்டன் பிரபுவும் மற்றும் மூவரும் ஐ.ஆர்.ஏ.யின் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டனர். மேலுமொரு குண்டுவெடிப்பில் 18 பிரித்தானியப் படையினர் கொல்லப்பட்டனர்.

★ 1982-துருக்கிய இராணுவ உயர் அதிகாரி அடில்லா அட்லிகாட் என்பவர் கனடாவின் ஒட்டாவாவில் சுட்டுக் கொல்லப்பட்டார். 1915 ஆம் ஆண்டில் 1.5 மில்லியன் ஆர்மீனியர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு பழிவாங்கவென இத்தாக்குதலை நடத்தியதாக ஆர்மீனிய தீவிரவாதக் குழு இதற்கு உரிமை கோரியது.

★ 1985-நைஜீரியாவில் நிகழ்ந்த இராணுவப் புரட்சியில் அந்நாட்டு அரசு கவிழ்க்கப்பட்டது.

★ 1991-சோவியத் ஒன்றியத்தில் இருந்து மால்டோவா பிரிந்தது.

★ 2000-மொஸ்கோவின் ஒஸ்டான்கினோ கோபுரம் தீப்பற்றியதில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2003-செவ்வாய்க் கோள் பூமிக்கு மிகக் கிட்டவாக 55758006 கிலோமீற்றர் தூரத்துக்கு 60 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் வந்தது.

★ 2006-அமெரிக்காவின் கென்டக்கியில் புளூகிராஸ் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட விமானம் சிறிது நேரத்தில் தரையில் வீழ்ந்து நொருங்கியதில் 50 பேரில் 49 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006-பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாநில முன்னாள் முதல்வர் நவாப் அக்பர் பக்டி இராணுவத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

### பிறப்புக்கள்

★ 1770-ஹெகல், ஜேர்மன் மெய்யியல் அறிஞர் (இ.1831)

★ 1908-தண்டபாணி தேசிகர், கர்நாடக இசைப் பாடகர்

★ 1908-டொன் பிறட்மன், அவுஸ்திரேலியத் துடுப்பாளர் (இ.2001)

★ 1942-வலேரி பொல்யாக்கொவ், உருசிய விண்வெளி வீரர்

★ 1972-தி க்ரேட் காளீ, இந்திய தொழில் முறை மல்யுத்த வீரர் நடிகர்

### இறப்புக்கள்

★ 1879-ரோலண்ட் ஹில், நவீன அஞ்சல் சேவையைக் கண்டுபிடித்தவர் (பி.1795)

★ 1963-டபிள்யூ. இ.பி.டுபோய்ஸ், ஆபிரிக்க, அமெரிக்க மனித உரிமையாளர் (பி.1868)

★ 1965-லெ கொபூசியே, சுவிட்சர்லாந்து கட்டடக் கலைஞர் (பி.1887)

★ 1975-முதலாம் ஹைலி செலாசி, எதியோப்பிய மன்னர் (பி.1892)


★ 1976-முகேஷ், இந்தியப் பின்னணிப் பாடகர் (பி.1923)

★ 1979-மவுண்ட்பேட்டன் பிரபு, பிரித்தானிய அட்மிரல் (பி.1900)

### சிறப்பு நாள்

★ மோல்டோவா- சுதந்திர தினம் (1991)

# நவீன எண் சோதிடம்



## எல்லோருக்கும் உதவும் மனப்பான்மை கொண்டவர்கள்

30

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

### 4- இராகுவின் பொதுப் பலன்

4,13,22,31 போன்ற தேதியில் பிறந்த அனைவரும் ராகு ஆதிக்கம் உள்ளவர்களே. ஞானகாரகன் என்று அழைக்கப்படும் இராகு, சிறந்த அறிவையும் சிந்தனா சக்தியையும் முன்கூட்டியே எதையும் அறியும் ஆற்றலையும் கொடுக்கும்.

சிறந்த பேச்சாற்றலாலும், பொது மக்களக்கு உதவுவதாலும் சாஸ்திரம், விஞ்ஞானம், கணிதம் போன்றவற்றில் கெட்டிக்காரர் களாக இருப்பதாலும் தன் தகுதியை உயர்த்திக்கொள்வர். எப்பொழுதும் சுதந்திரமாய் இருக்க வேண்டும் என்று நினைப்பதால், பிறர் கட்டுப்பாட்டின் கீழ் வாழ மாட்டார்கள். எல்லா விடயங்களையும் சிறிதளவாவது தெரிந்து வைத்திருப்பர். தன்னுடைய கருத்துக்களை எழுத்தாலும் பேச்சாலும் துடுக்காக வெளியிடுவர்.

ஊர் சுற்றும் ஆசை கொண்ட இவர்கள், பல இடங்களைக் கண்டு அனுபவத்தைப் பெற்றிருப்பதால் மற்றவர்கள் இவர்களிடம் யோசனை கேட்பர்.

பிறர் பேசுவதை முழுவதும் கேட்காது மறுத்துப்பேசுவர். முன் கோபியான இவர்கள் வயது ஏறஏற தன்னைத் திருத்திக் கொண்டு வாழ முற்படுவர். எவ்வளவு சிரமங்கள் வந்தாலும், சிறிது நேரம் கவலைப்பட்டு உடனே அந்தக் கவலையை விரட்டிவிடுவர்.

நரம்புச்சக்தி கூடிய இவர்கள் ஓரளவு உயரமானவர்களாகவும் பார்ப்பதற்குக் கம்பீரமானவர் களாகவும் சிந்தனாசக்தி உடைவர்களாகவும் இருப்பர். பிறருக்கு உதவும் மனங்கொண்ட இவர்கள் பலர் போற்றும் மனிதராக வாழ்வர். எந்தப்பழக்கத்துக்கும் அடிமையாக இருக்கமாட்டார். ஆனால் சில பழக்கத்தை தொட்டு மனக் கட்டுப்பாட்டால் விட்டுவிடுவர். யாரும் தன் கஷ்டத்தை சொல்லி அழுதால் தானும் அவர்களுடன் சேர்ந்து அழுது விடுவர். இவர்களுடைய மூளை மின்னல் வேகத்தில் பதில் கொடுக்கும் தன்மையுடையது.

இவர்களிடம் பல திறமைகள் இருப்பதால் மற்றவர்கள் மதிப்பர். எங்கு சென்றாலும் வரவேற்பு உண்டு. சிரமப்பட்டுப் பணம் சேர்த்து குதூகலமாகச் செலவு செய்வர். பணம் செலவானதும் தனிமையில் வருந்துவர். மனத் துணிவு கொண்ட இவர்களுக்கு உண்மையான நண்பர்கள் என்றும் உண்டு.

இவர்களில் 9 வகையானவர் களைப் பார்ப்போம்.

■ ■ ■

### உடல் எண் 4 உயிர் எண் 1

4,13,22,31 போன்ற தேதியில் பிறந்து தேதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வந்தால் இராகு, சூரியன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்த வராவர். பார்ப்பதற்கு ஓரளவு உயரமாகவும், அலை போன்ற முடியுடையவராகவும், எடுப்பான தோற்றமுடையவராகவும் இருப்பர். உஷ்ணமான உடலமைப்புக் கொண்டவர்களாதலால் சிலருக்கு தலைமுடி உதிரும். சிற்றின்பத்தில் அதிக ஆர்வம் இருக்கும். ஆனால் முறைகேடான விடயங்களை வெறுப்பர்.

இவர்களுக்கு பேசுவதாலும், எழுதுவதாலும் உயர்வு உண்டாகும். இவர்களில் பலருக்கு நல்ல குடும்ப வாழ்க்கை அமைந்து விடுகிறது. தன் மனதில் தோன்றுகின்ற கருத்துக்களை மறைக்காமல் வெளியிடுவர். பிறர் பேசுவதை பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்காது குறுக்காக பேசுவர். இதை உணர்ந்து திருத்திக் கொள்வது நலம்.

எல்லோருக்கும் உதவும் மன்பான்மை கொண்ட இவர்களை மற்றவர்கள் மதிப்பர். பலரிடம் நல்ல மனிதன் என்ற பெயரையும் ஒரு சிலரின் பொறாண்மையால் கெட்ட பெயரையும் எடுப்பர். யார் எதைக் கூறினாலும் நம்பாது தீர விசாரித்து ஒரு பிரச்சனைக்கு முடிவெடுக்கும் தன்மை கொண்டவராதலால், இவர்களைக் கண்ட அனைவரும் மரியாதை கொடுப்பர். தான் ஒரு தவறு செய்தாலும் உணர்ந்து திருந்திடுவர். பிறருக்கு தீங்கு செய்யாத மனப்பான்மை, கொண்ட இவர்கள், நேர்மையைத் தவிர போலிகளைக் கண்டு வெறுப்பவராவர். இவர்களின் நட்பைப் பெற பலர் முன்வருவர். ஆனால் இவர்களுக்கு ஒருவரைப் பிடிக்க வில்லை என்றால், எந்தவித தீங்கும் செய்ய முற்பட்டால், எதிரி தப்பவே முடியாது. நல்ல புத்திக் கூர்மை உடையவராதலால் எங்கு சென்றாலும் பல விடயங்களினை சேகரித்துக் கொண்டே இருப்பர். ஒருவன் கேட்கும் கேள்விகளுக்கு மின்னல் வேகத்தில் பதில் கூறுவர். சாதாரண உத்தியோகத்தில் இருந்தாலும், தன் தனித்திறமையால், உயர்ந்த இடத்தைப் பிடிப்பர். அப்படி உயர முடியவில்லை என்றால் இவர்களுக்கு பெயர் பொருத்தமாக அமையவில்லை என்றுதான் கருத வேண்டும். சிலர் உத்தியோகமும் பலர் சொந்தத் தொழிலும் செய்து வருகின்றனர். உத்தியோகத்தில் இருக்கும் சிலர் சொந்தத் தொழிலும் செய்து வருகின்றனர். உத்தியோகத்தில் இருக்கும் சிலர் சொந்தத்தொழில் செய்ய முயல்வர். இன்னும் சிலர் பேச்சாளராக்வும் எழுத்தாளராகவும் புகழை அடைவர். நண்பர்கள் புடை சூழவாழும் இவர்கள் பிறருக்கு உதவ முன்வந்து சில விடயங்களில் மாட்டிக்கொள்வர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்திருக்குமேயானால் எவ்வித துன்பம் வந்தாலும் இறுதியில் நன்மையாகவே முடியும். சாதாரண மனிதனாக இருந்து, படிப்படியா வாழ்க்கையின் உச்ச நிலையை அடைவர்.

எவ்வளவு பணம் வந்தாலும் செலவு காத்துக் கொண்டிருக்கிறதே என்று வேதனைப்படுவர். நாணயமாகவும் நம்பிக்கையாகவும் நடந்து கொள்வதால் இவர்களைப் பதைக் காணலாம். ஆனால், பெயர் பொருத்தமானதாக அமையாதவர்கள் திறமையிருந்தும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர். இதனால் பெயரை நன்கு மாற்றி அமைத்துக் கொண்டு நல்ல மனைவி, நல்ல குழந்தை நல்ல ஆரோக்கியம் நிறைந்த செல்வம் பெற்று சிறப்பாக வாழலாம். நண்பர்களது ஆதரவு என்றும் உண்டு.

**தொழில்**


பேச்சாலும், எழுத்தாலும் பொருள் சேர்க்கும் வாய்ப்பு உண்டு. கமிஷன், வாகனம், நெருப்பு, இரும்பு சம்பந்தமான தொழிலாலும் நான்கு கால் பொருட்களாலும் பொருள் சேர்க்கும் யோகம் உண்டு.

**நோய்**

இவர்களுக்கு அதிக உஷ்ணமான நோய்கள் அனைத்தும் வரும். பைல்சு, இரத்த அழுத்தம். வாயுக்கோளாறு சம்பந்தப்பட்ட நோய்கள் வருவதால் முன்கூட்டியே தவிர்க்க முயல வேண்டும். பொருத்தமான எண்களில் பெயரை அமைத்துக் கொண்டால் நோயிலிருந்து விடுபடலாம்.

- **பெயர் அமைக்கும் முறை**

இராகு, சூரியன் போன்ற ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு சூரியன், சுக்கிரன் ஆதிக்கம் வருமாறு பெயரை 10, 19,37, 46,64,73,15,24,33,42,51,60,69 போன்ற எண்களில் அமைத்துக் கொள்வது சிறப்பாகும். தான்



பலர் நம்புவதோடு இவரது தலைமையையும் பலர் ஏற்றுக் கொள்ளுவர் புகழ்ச்சியில் மயங்குவதால் இவர்களைப் புகழ்ந்து பேசி நண்பர்கள் இவர்களிடம் காரியம் சாதித்துக் கொண்டுவிடுவர்.

சாப்பாட்டுப் பிரியரான இவர்களுக்கு நல்ல ருசியான சாப்பாடு எப்பொழுதும் தேவை. ஆனால், ஒரு காரியத்தில் இறங்கிவிட்டால் எதையும் லட்சியம் செய்யாமல் உழைப்பர்.

இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் உத்தியோகத்திலும் தொழிலும் உயர்ந்த நிலையில் இருப் செய்கின்ற வியாபார விலாசத்தையும் இந்த எண்ணிக்கையில் அமைத்துக் கொண்டால், லாபம் அடையலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 1,6

யோகமான தேதிகள்-1,10, 19,28;6,15,24

யோகமானநிறம்-மஞ்சள், நீலம்

யோகமான மோதிரக்கல்- கோமேதகம், வெளிர் நீலக்கல்,


ஆகாத நிறம்- கறுப்பு சிவப்பு

ஆகாத தேதிகள்-8,17,26 ஆனால், எதிர்பாராத நன்மை அளிக்கும்.

(தொடரும்)



# நல்லூர்க் கந்தசுவாமி ஆலய தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 2011.08.27



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா கலியுகவரதனாகிய கந்தப் பெருமான் வழிபடும் அடியயார்களின் இன்னல்கள் போக்கி இன்னருள் புரியும் நோக்கில் எழுந்தருளி வீற்றிருக்கும் தலம் நல்லூர்.

இங்கு நடைபெறுகின்ற வருடாந்த மகோற்சவத்திலே இன்று இரதோற்சவம் நிகழ்கின்றது. பெருமானுடைய ஐந்தொழிலில் அழித்தலைக் குறிப்பது தேர்த்திருவிழா. அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழிப்பதற்காக முருகன் இன்று ஷண்முகப்பெருமானாக வள்ளி தெய்வயானையுடன் தேரிலே ஆரோகணிக்கிறார்.

அந்த அழகன் முருகன் அடியார்கள் அனைவருக்கும் சந்தோஷம் நிறைந்த சமாதான நல்வாழ்வை நல்கவேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து நல்லைக்கந்தனின் கழல்பணிந்து உளமார பிரார்த்தித்து அருளாசிகளை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

கைதொழும் அடியார்களின் கடுவினையகற்றி சகல சௌபாக்கியங்களும் நிறைந்த மகிழ்ச்சியான, மங்களகரமான, சுபீட்சமான நல்வாழ்வை நல்க வேண்டி முருகனை வாழ்த்தித்துதிக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர், யாழ்ப்பாணம்.

## சைவத்தமிழ் மக்களுக்கு சமுதாயப் பெருவிழா

இன்று எண்ணிறைந்த அடியார்களுக்கெல்லாம் முருகப் பெருமான் தேரிலே பவனிவந்து காட்சிதருகின்றார். இத்தேர்விழா சைவத்தமிழ் மக்களுக்கு எல்லாம் சமுதாயப் பெருவிழாவாக அமைகின்றது.

கடையிற்சுவாமி, செல்லப்பாசாமிகள், யோகர் சுவாமிகள் போன்ற சித்தர்களும், ஞானிகளும் ஞான நடனம் புரிந்த ஞானபூமி இது. நல்லூரில் பிறந்து நல்லைமுருகப் பெருமானின் பெரும் புகழ் அறிந்தவர் நாவலர்பெருமான். நல்லூரின் திருவீதியிலேயே தெற்கு வீதியை திருமடம் அமைத்து திருஞானசம்பந்தர் குருபூசை செய்தவர் இவர்.

இங்கு நல்லூரின் மஹோற்சவ காலங்களில் திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து ஓதுபவர்களை அழைத்து தேவாரத் திருப்பதிகங்கள் வீதி வலம்வரும் சுவாமியின் பின்னால் ஓதுவித்தார். ஓதுவார்களுக்கு எல்லாம் மகேஸ்வர பூசையும் செய்வித்தவர் நாவலர். இதற்கெல்லாம் நாவலர் சிவவேடப் பொலிவோடு திருக்கூட்ட தலைவராய் நின்றார்.இதன் சிறப்பைபண்டிதமணி அவர்கள் ஆதியிலே சுப்பிரமணியப் பெருமானின் அவதாரமாக விளங்கிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் 16000 திருக்கூட்டத்தோடு தோன்றிய சிறப்புக்கு ஒப்பிடலாம் எனப் பெருமை கொள்வார்.

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாகிய நல்லைநகர் செவ்வேளின் தேர்விழாக் காட்சியைத் தரிசித்து என்றும் இளையோனாகிய நல்லைத் திருமுருகனின் திருவருள் கைகூட பிரார்த்திப்போமாக

கா.சிவபாலன்

## நாடும் அன்பர் நலன் கரத்திட நல்லைக்கந்தன் தேரேறி வருகிறான்

சரித்திர பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவங்களில் சிறப்பு உற்சவமாக இரதோற் சவம் இன்று பக்திபூர்வமாக நடைபெறுகின்றது. இலட்சோப இலட்சம் மக்கள் நல்லைக் கந்தனின் தேர்ப்பவனியில் கலந்து கொள்கிறார்கள். அவன் திருவருளுக்கு பாத்திரமாகி நாலா திசைகளிலும் தேரேறி வருகின்ற ஆறுமுகப்பெருமானை வழி பாடியற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவனாக வலிமையும் அழகும் அருளும் அன்பும் பொருந்திய பெருங்கடவுள் என கந்தபுராண காவியநாயகனாக சூரனுடலற வாரி சுவறிட வேலை விடவல பெருமாள் என திருப்புகழ் நாயகனாக தாரகன், சிங்கன், சூரன் செருக்கடக்கிய செம்மலாக சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல் என்ற வரிகளுக்கு இன்றும் தனிப் பெரும் தெய்வமாக உமையாள் பயந்த இலஞ்சியமாக, சரவணத்தில் உதித்த ஆறுமுகனாக, திருத்தணிகை, பழனி, திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருச்சீரலைவாய், திருப்பரங்குன்றம் என்னும் ஆறுபடை வீடுகளிலும் அமர்ந்தருள் புரியும் ஈசனாய் அழகிய சித்திரத் தேரிலே ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டித் தேறுதலைத்தந்து தேச நலன் காக்க நல்லூரான் தேரேறி வருகின்ற திருக்காட்சி அற்புதக் காட்சியாக அமைகிறது.

இன்று நல்லையம்பதி இந்திரவிழாபோல காட்சியளிக்கின்றது. எந்த மயமும் கந்த மயமாகவே இருக்கின்றது. முருகப்பெருமான் தன்னுடைய ஆறுமுகக் கோலத்துடன் தேரேறி எழுந்தருளி வருகின்றான். சிவபெருமானுடைய ஐந்து முகமும் உமாதேவியாரின் ஒருமுகமும் சேர்ந்து சிவனும் சக்தியும் கலந்த ஒரு திருவுருவமாக ஆறுமுகப்பெருமான் தோன்றினார் என்று சொல்லப்படுகிறது.

நான்கு திசைகளாகிய இடங்கள் மேல், கீழ் என்ற இரண்டு ஆகிய ஆறு இடங்களிலும் எம் பெருமானுடைய திருவருட்பார்வை செல்கின்றது என்பது அவனுடைய ஆறு திருமுகங்களும் நமக்குத் சொல்கின்றன.


இத்தகு பெருமைகளைக் கொண்ட ஆறுமுகசுவாமியே இன்று அடியார்களை அரவணைத்துக் காத்து இரட்சிப்பதற்காக தேரேறி வருகின்றான்.

முருகன் தன் திருக்கரத்தில் வேலைத் தாங்கி வருகின்ற திருக்கோலம் பார்க்க பரவசமாகும். அவ்வேல் ஞானசக்தி வேல் ஆகும். அஞ்ஞானப் பகையை வெல்ல, ஆணவ இருளைப் போக்க, மீளாத பகையை விரட்ட ஞானவேல் ஏந்திய பெருமானாக திருத்தேரில் ஆரோகணித்து வருகின்றார்.

தனிவழி நடக்கும் அன்பர்களுக்கு வலப்புறத்தும் இடப்புறத்தும் முன்னும் பின்னும் எங்குமாகி இரவு பகலில் துணையாக விளங்குவது வேல் என்கிறார் அருணகிரிநாதர். இத்தகு வரலாற்று பெருமை சிறப்போடு வேலேந்திய பெருமானாக வினை போக்க வருகின்றான். எல்லோரும் இன்புற்று வாழ நல்லவராக, வல்லவராக மற்றவர் நலன் கண்டு மகிழ நாமெல்லோரும் நல்லைக் கந்தனின் திருவடித் தாமரைகளை சிரசினில் சூட்டி அவன் புகழ்பாடி பிரார்த்தித்து வழிபடுவோமாக.

மதுரகவி காரை எம்பி
அருளானந்தன்


தேரேறும் திருமுருகா உன் அருள் தா மருகா!!!



220 இற்கு மேற்பட்ட உலக நாடுகளுக்கான துரித தபால், பொதிகள் சேவை

DHL

உங்களுக்குத் தேவையான அனைத்து பொருள்களையும் உலக நாடுகளுக்கு அனுப்பி DHL மூலம் பெற்றுக்கொள்ள சிறந்த சேவையை வழங்குகிறது.

திருமுருகன் கொம் நெற்

வெளிநாட்டு கடவுச்சீட்டு உடைய ஒருவருக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

வட மாகாணத்திற்கான உங்கள் DHL முகவர் திருமுருகன் கொம் நெற் மட்டுமே...!

- போலி முகவர்களிடம் ஏமாற வேண்டாம்.
- விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இல.259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல.05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல.46,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

TCN Express
2 B NELSAN PLACE, COLOMBO-06.





*2011 க.பொ.த உயர்தர பரீட்சை எழுதிக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு நல்லூரான் திருவருள் கிடைக்க பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்*

பரீட்சை எழுதிக்கொண்டிருக்கும் மாணவர்கள் தமிழ்இணைய பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பதிவுகளை மேற்கொண்டு தமிழியல் பட்டப்படிப்பை தொடர்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

சிந்து அக்கடமி
இல45/1, யாழ்வீதி,
யாழ்ப்பாணம்.

பாரதி கல்வி நிலையம்
மீசாலை.

சைன் கல்வி நிலையம்
அரியாலை.
தொ.பே.இல:- 0775835372

(சி-4186)

2010 இல் பரீட்சை எழுதி எம்முடன் தொடர்பு கொண்ட மாணவர்கள் படப்படிப்பின் முதலாம் ஆண்டில் முதலாம் பருவ பரீட்சைக்கு 15/09/2011 அன்று தோற்றவுள்ளனர்.

# சுய வருமானத்தை ஈட்டித்தரும் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை

(15-VII)

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வீட்டுத்தோட்டம் என்பது ஒவ்வொருவரினதும் திறமைகளை உள்வாங்கி உருவாக்கப்படும் ஓர் அழகுக் கலை படைப்பும் கூட. வீடொன்றிற்கு தினமும் தேவைப்படும் மரக்கறி வகை, பழங்கள் இன்னும் மூலிகைகள் என்பதற்கு மேலாக அவரவர் கலைப் படைப்பாகவும் இதனை இனங்காணமுடியும்.


இந்த இயந்திர வாழ்க்கையினுள் அல்லலுற்று அதில் உள்வாங்கப்பட்டு மிஞ்சியதான மனவுழைச்சலிலிருந்தும் தொடர்ச்சியான வேலைப்பளுவில் இருந்தும் எமது மனத்தை புத்துணர்ச்சி கொடுத்து அவ்வப்போது சோர்விலிருந்து மீட்டெடுத்துக்கொள்ள வேண்டும்.

எக்காரணங்கொண்டும் மனத்தை தளர விடக்கூடாது. அது எமது செயற்பாட்டின் வினைத்திறனை வெகுவாகப் பாதித்துவிடும். எமது மனத்தை, எண்ணங்களை, செயலாற்றலை புத்துயிர்ப்புடன் வைத்திருக்க நாம் வாழும் சூழல் மிக முக்கியமாகும்.

தினமும் நல்ல காட்சி, சுகந்தமான சுவாசம், பறவைகளின் ரீங்காரமான ஒலி இவை என்றுமே எமது மனதிற்கு ஆறுதலும் மகிழ்ச்சியையும் கொடுப்பனவாகும்.

நிம்மதியான வாழ்வுக்குள் இவை யும் உள்ளடங்கியிருப்பதை கவனிக்க தவறிவிடுகின்றோம்.

இன்னும் எமது விருப்பத்தை செயற்படுத்த முனைவதும் அதற்கு தாவரங்கள் செவிசாய்ப்பதுவும் மனதிற்கு ரம்மியமான நிகழ்வுகள். ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் திறமைகளை பொழுது போக்காக குறுகிய நேரமாயினும் ஈடுபட்டு வெளிக்கொணரும் பயிற்சிப் பட்டறையென வீட்டுத்தோட்டத்தை வரையறுக்கலாம்.



ஓடியோடி வேலை செய்வதும் வருவாயைப் பெருக்குவதும் இறுதியில் நலமான வாழ்வு ஒன்றிற்காகவே. இங்கே நல்வாழ்வு என்பதில் மனமும் எண்ணங்களும் இளமையாக, ஆரோக்கியமாக இருக்க வேண்டும்.

வயது போகப் போக உடலில் முதிர்வின் அறிகுறிகள் தோன்றிடினும் மனம் என்றுமே இளமையானதாக, துடிப்புள்ளதாக, புத்துணர்ச்சியுள்ளதாக இருத்தல் அவசியம். இதற்கு எமது எண்ணங்கள், செயல்கள் என்பன ஒத்தாசையுள்ளதாக இருக்க வேண்டும்.

நாள் முழுக்க வேலைத்தளத்தினுள் கழித்துவிட்டு சற்று ஓய்வுதேடி வீடுவரும் ஆண், பெண் இருபாலாருக்கும் அவரவர் வீட்டில் அமைதியான, ரம்மியமான, சுகந்தமான சூழல் மனஆறுதல் தரும். மாறாக வீட்டில் மகிழ்வுற முடியாதபோது எரிச்சலும் இரத்த அழுத்தமும் அதிகரித்துவிடும். என்ன வாழ்க்கை என்ற சலிப்புத் தன்மையை எந்த நிலையிலும் நாம் உணரக்கூடாது.

இதற்காக வீட்டிலுள்ள இடவசதியைப் பயன்படுத்தி உணவுப்பயிர்கள் தவிர்ந்த பலவகையான அழகுத்தாவரங்களை வளர்த்துக் கொள்ளலாம்.

பச்சை நிறம் மனதிற்கு குளர்ச்சியைத் தருவது. அதுவே பசுமையின் இரகசியமும் கூட. இங்கே பலவகை நிறங்களுடைய அழகுத்தாவரங்களை வளர்த்துக் கண்ணுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்தலாம்.



வீட்டின் அழகு வீட்டுத்தோட்டத்திலிருக்கும். மாடிவீடு கட்டி விதம் விதமாய் வர்ணம் பூசினாலும் இயற்கையை மிஞ்சியது எதுவுமில்லையே.

எமது பகுதிகளில் நீர்த்தட்டுப்பாடு ஒரு பிரச்சினையாக உருவெடுக்கும். இக் கால கட்டத்தில் நீரின் தேவை குறைந்த விதம் விதமான கள்ளி, எக்சோறா வகைகளை தெரிந்து நடலாம். பூக்களை நிறைவாக உருவாக்கும் தாவரங்களை சேர்த்துக் கொள்ளலாம்.

எங்களிடம் வந்து சேரும் பிளாஸ்டிக் மற்றும் தகர கொள்கலன்களுக்குள் நீர்த்தேங்காது தாவரங்களை தொங்கும் நிலையில் வளர்க்கலாம். அநேகமான மூலிகைத் தாவரங்கள் நீர்த்தேவை குறைந்தவை. அவற்றை வளர்ப்பதுவும் சுலபம்.

அதன் மூலம் நிறைந்த பயனையும் பெறலாம். அண்மையில் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட வீட்டுத்தோட்ட போட்டியில் பயன்படுத்தப்பட்ட வாகன ரயர்களை விதம் விதமாக வெட்டி அதில் இலைவகைப் பயிர்களை வளர்த்திருந்த நேர்த்தியை அனைவரும் வியந்து பார்த்தனர். வெறுமனே நீர்தேங்கி நுளம்பு பெருகுவதற்கு இடமளிக்காது அவற்றினை தாவரங்களை வளர்க்க பயன்படுத்திய கலையார்வத்தை பாராட்ட வேண்டும். (தொடரும்)

# உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்க நடவடிக்கை

யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் புலமைப்பரிசில் நிதியத்தின் ஊடாக வருமானம் குறைந்த விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு தலா ரூபா 20ஆயிரம் வீதம் புலமைப்பரிசில்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு விண்ணப்பிப்போர் பின்வரும் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

✷ முழு நேர விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் பெற்றோரில் ஒருவராவது ஏதாவதொரு கமக்காரர் அமைப்பில் உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

✷ சமுர்த்தி நிவாரணம் பெறாத குடும்ப அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

✷ 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்த 2012 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவனாக அல்லது மாணவியாக இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தமது எல்லைக்குட்பட்ட கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று தத்தமது கமக்கார அமைப்பின் சிபார்சுடன் உரிய கமநல சேவைகள் நிலைய கமநல அபிவிருத்தி உத்தி யோகத்தரிடம் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை தாம் கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் சிபார்சுக் கடிதத்துடனும் குறித் த கிராம சேவை உத்தியோகத்தரின் சிபாரிசு கடிதத்துடனும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பு நேரடியாக கையளிக்கும்படி கேட்டுக் கொள்வதாகவும் மேலும் மேற்படி திட்டத்தில் வறுமை, குடும்பநிலை, பிள்ளையின் கல்வித்தரம், மீள்குடியமர்வு என்பன கருத்தில் எடுக்கப்பட்டு தெரிவு நடைபெறும் எனவும் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக்டிறஞ்சன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# அன்னதான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வருடாந்தோறும் யாழ்.மாநகரசபை நீர் வேலைப்பகுதி கலியுகவரதன் இந்து மன்றத்தால் நல்லூர் தேர்த்திருவிழா அன்று இந்துவிடுதி அலுவலகத்தில் நடத்தப்படும் அன்னதான நிகழ்வை இவ்வருடமும் இன்று சனிக்கிழமை மு.ப.9 மணி முதல் பி.ப.3 மணி வரை நடத்தப்படவுள்ளதாகவும் இவ் அன்னதான நிகழ்வில் பங்குபற்றி முருகன் அருள் பெற்றேகுமாறு கலியுக வரதன் இந்து மன்றத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (ஸ்ரீ)

# நாச்சிக்குடாவில் புதிய கடற்படைத்தளம்

(கொழும்பு)

நாச்சிக்குடா கடற்படைத்தளம் நேற்று முன்தினம் காலை திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இது தொடர்பாக கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக்க திஸாநாக்க தெரிவிக்கையில்,

எந்தவிதவொரு காரணத்திற்காகவும் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குதவதற்கு இடமளிக்கமாட்டாது.

இலங்கை கடற்படை நாட்டைச் சுற்றியுள்ள கடல் பகுதியில் ஆகக் கூடுதலான பாதுகாப்பை வழங்குகிறது.

கடற்படைத் தலைமையகங்கள் பாணம மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் அமைக்கப்படவுள்ளன.


முள்ளிக்குளம் கடற்படைநிலையம் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

நாச்சிக்குடா கடற்படை முகாம் 752 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடற்படைத் தளத்தை சுற்றியுள்ள பகுதிகளில் அண்மைக் காலம் வரை இந்தியாவிலிருந்து போதைவஸ்துக்களை கடத்தவும் டைனமற்வெடி பிரயோகித்து மீன்களை கொல்லவும் மற்றும் பல சட்டவிரோத நடவடிக்கைகளையும் மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டிருந்தது. இத்தகைய குற்றச் செயல்களை தடுப்பதற்காகவே கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாணத்தில் கடற்படைத் தலைமையகம் தலைமன்னாரில் அமைக்கப்பட்டிருந்த அலுவலகம் நாச்சிக்குடா ஸ்தலத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றார். (ஸ்ரீ)




# நல்லூர்க் கந்தசுவாமி ஆலய
# தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 2011.08.27




தேரேறும் முருகா உன் அருட்காட்சி தாராய் கந்தா!






**சிறி மீனாட்சி**
**நகை மாளிகை**
**SREE MEENAATCHI GOLD HOUSE**
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்
187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021-2226109





இன்று தேர்ப் பவனி வரும் நல்லூரானின் திருவருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுகிறோம்!



**காவேரி சில்க்ஸ்**
திருமண பட்டுப்புடைவைகளிற்கு கைராசியான ஸ்தாபனம்.
இல.48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222333







வேல்கொண்டு வினையறுக்க வாராய் வேலவா!
**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**
திருமணப் பட்டுப் புடைவைகள் மற்றும் அனைத்து வகையான ஆடைத் தெரிவுகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல- 41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2063






இன்று தேர்ப்பவனி வரும் நல்லைக் கந்தனின் அருட்கடாட்சம் யாவருக்கும் கிடைப்பதாக!



**யோகாஸ்**
**நகை அகம்**
205/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.







**சிறி தேவி கருமாரி**
**நகை மாடம்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்



83/01, கஸ்தூரியார் வீதி,
செம்மாதெரு, யாழ்ப்பாணம்.
T.P.:021 5672567



**G.T.V.ENTERPRISES (PVT) LTD**
அனைத்து நாடுகளுக்குமான பொதிகள் சேவையை குறைந்த செலவில் பாதுகாப்பாகவும், விரைவாகவும், உத்தரவாதத்துடனும் அவரவர் வீடுகளில் கிடைக்கக்கூடியதாக வழங்கி வருகின்ற நம்பிக்கையான இடம்.

225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4348

No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825






Vijeya Enterprises
Maharaja Food Products
18/3, Dr.E.A Cooray Mawatha,
Wellawathte,
Colombo 06,
SriLanka.
T.P:-0112360926,
info@maharajafoodproduct.com



# நல்லூர்க் கந்தசுவாமி ஆலய
# தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 2011.08.27




மெல்லச் சிரிக்கும் நல்லைக் கந்தன் புன்னகையை காண வாரீர்!!



**சானுகா நகைமாடம்**

916

இணை நிறுவனம்:-
சானுகா -ஜீவல்ஸ்
இல. 64D, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P.:021 222 4687

தங்கத்தின் தரத்தை அளவிடும் கரட் மீற்றர்
ஜெர்மன் தயாரிப்பான கரட் மீற்றரில்
தங்கள் நகைகளை - கணனி
முறையில் பரிசோதித்துக் கொள்ள!!

சானுகா -நகை மாடம்
இல. 200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P.:021 222 3700

WESTERN UNION
MONEY TRANSFER

**SRI MURUGAN**

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

CURVFORM BRASSIERS,SILVER SHIELD SOCKS,SRILANA INSURANCE CORPORATION LTD

e-mail:-srimurugan@eureka.lk,srimurugan09@gmail.com



#303,K.K.S. Road, Jaffna.
Tel:- 0212225392, 0212222670
Fax:-0212223214

தேரேறும் முருகா சரணம் சரணம்!



**GREEDY'S**
**Hotel & Restaurant**

PIZZA

இனிமையான நினைவுகளுக்கு...
- இந்திய, இலங்கை, சீன உணவு வகைகள்
- AC, NON AC அறைகள் வாடகைக்கு உண்டு
- T.V இலவச இன்டர்நெட் சேவை
- திருமண தேவைகளுக்கான கார் வசதி செய்துதரப்படும்.

205, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் பில்டிங்)
தொ.பே: 021 222 1939
0776081701, 0778338549



# நல்லூர்க் கந்தசுவாமி ஆலய
# தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 2011.08.27





ஆறுமுகனே ஆறுதலை தந்திடப்பா!

கிருஷ்ணா நகை மாளிகை

குறித்த நேரத்தில் குறித்த தவணையில் தரம் குன்றாத 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

கிளை : கிருஷ்ணா அடகுக்கடை,
இல- 370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

இல- 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5046



முருகனே! முத்துக் குமரனே வள்ளிதெய்வானையுடன் தேரேறி வந்தே வினைபோக்க வா! வா!! வா!!!

ஸ்ரீ வெங்கடேஸ்வரா றேடர்ஸ்

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உருளைக்கிழங்குகளின் மொத்த விற்பனையாளர்
தரமான உருளைக்கிழங்குகளைப் பெற்று தரமாக விற்பனை செய்யுங்கள்

சில்லறை, மொத்த வியாபாரிகளுக்கு
விசேட தள்ளுபடி வழங்கப்படும்.

மளிகைப் பொருட்களையும் எம்மிடம்
மொத்தமாகப் பெற்றுக் கொள்ள முடியும்

இல. 589, 591, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்

T.P.:021 222 4579

சங்கடங்கள் தீர்த்திடுவாய் சண்முகனே!

HOLCIM CEMENT



Jaffna District Batas
யாழ். ஏக விநியோகஸ்தர்கள்
SRI RANGAN ENTERPRISES
370, Hospital Road, Jaffna.

Authorized Dealer Prima Ceylon (PVT) Ltd.
யாழ். மண்ணில் பிரிமா உற்பத்திகளின்
அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்

ஸ்ரீ றங்கன் என்ரப்பிறைஸ்

370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P - 021 222 2027

# நல்லூர்க் கந்தசுவாமி ஆலய
# தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 2011.08.27


ரதம் ஏறும் நல்லைக் குமரனின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்

ஓம் லக்ஷ்மி நாராயணா துணை

மொத்தமாகவும் சில்லறையாகவும் பல்பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.

New நியூ ஸ்ரீ திருப்பதி ரேடர்ஸ்

Sri Thiruppathy Traders

188B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P:- 0773024195, 0773366482

தேரேறு முருகா! உன் அருள் தா முருகா!

வேல் முருகன் வாணிப நிலையம் VELMURUGAN TRADERS

தற்கால நவநாகரிக கட்டடங்களுக்கு ஏற்ப சகல விதமான வர்ண

பெயின்ட் வகைகளும், சுண்ணாம்பு மற்றும் கட்டடப் பொருள் விற்பனையாளர்.

இல.56A,295A மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 9437

தேரேறி பவனி வரும் கந்தனின் அருள் கிடைக்கட்டும்!

சாம்சன் கட்டடப்பொருள் உற்பத்தியும் விற்பனையும்

கொங்கிறீட் கற்கள், கொங்கிறீட்தூண்கள் மற்றும் வீட்டுஅலங்காரப் பொருட்கள், சீமெந்து, சீற், ஓடு, தகரம் மற்றும் கம்பி வகைகளும் பழைய, புதிய பனைமரங்கள் நிலை கதவு, யன்னல் போன்வற்றுடன் பூச்சாடிகளும், பூக்கன்றுகளும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தொ.பே : 0776630390, 0214901677 நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும் பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா?விழுந்துவிட்டனவா? முன்னரைவிட உறுதியான, அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட-இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட

யாழ்ப்பாணத்தில் கை தேர்ந்த ஒரே ஸ்தாபனம்

கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.

எரிக்கணேஷ்

மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்

இல 564,566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


தொ.பே:021 222 2486

கிளைகள்:

பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல 80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

இல.91, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

இருளை நீக்கிட வருவாயய்யா...!

ஒலிபெருக்கி சாதனங்களும் அதற்குரிய உதிரிப் பாகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கோபுரம் சவுண்ட்ஸ்

இல.38, மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

Ithayam

ஆறுமுகம் கொண்டவனே உன் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்!

TVS YASO TVS

யசோ மோட்டோர்ஸ் & ஹாட்வெயர்ஸ்




தலைமை நிறுவனம்:
இல.163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2544, 021 222 7566

கிளை நிறுவனம்:
A-9 ரோட், சாவகச்சேரி (வைத்தியசாலை முன்பாக)
T.P:- 021 7200950

# நல்லூர் ஆலய சூழலில்...

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தின் ஆன்மீக சிந்தனையுடன் நடத்தும் சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் தினமும் மாலை 3 மணி முதல் 6 மணிவரை நடைபெற்று வருகின்றது. இதில் 24 ஆம் திருவிழாவான இன்றைய நிகழ்வில் முப்பொருள் தத்து வம் என்ற தொனிப்பொருளில் சைவப்புலவர் கு.சுமுகலிங்கம் சிறப்புச் சொற்பொழிவாற்ற வுள்ளார்.

அதனைத் தொடர்ந்து வேலணை வங்களாவடி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை, மல்லாகம் நீலியம்பனை அறநெறிப் பாடசாலை, நயினாதீவு மலையின் அறநெறிப் பாடசாசை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

* * * * *

சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் சைவமும் தமிழும் தழைத்தோங்கிடச் செய்திடல் வேண்டுமென்ற நோக்கில் நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 6.30 மணிக்கு ஆன்மீகச் சொற்பொழிவுகள் அறுபத்து மூன்று நாயன்மார் மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை முருக வழிபாடு எனும் தலைப்பில் பேராசிரியர் ப.கோபால கிருஷ்ணஐயர், நாளை ஞாயிற்றுக்கிழமை தொண்டர் பெருமை என்னும் தலைப்பில் இ.கேதீசன் ஆகியோர் சொற்பொழிவாற்றவுள்ளனர்.

* * * * *

இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையம் நல்லூர்க்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு மகேஸ்வரன் மண்டபத்தில் நடாத்தும் தெய்வீக இசையரங்குத் தொடரில் இன்று செல்வி சந்திரிக்கா மாணிக்கவேலின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

இதில் வயலின் கே.குகபரன், மிருதங்கம் பிரம்மஸ்ரீ கே. சுவாமிநாத சர்மா, கடம் செல்வன் ஸ்ரீ டிலுக்சன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக பங்கேற்கவுள்ளனர். அத்துடன் வாத்தியப் பிருந்தாவும் இடம்பெறும்.

* * * * *

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெற்று வரும் கம்பராமாயணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப்பேருரையில் இன்று நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா கும்பகர்ணன் எனும் தலைப்பில் இசைப்பேருரை நிகழ்த்தவுள்ளார்.

* * * * *

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 24ஆவது நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் ஏ.கே.கருணாகரனின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

இதில் வயலின் செல்வி சியாமளாங்கி கருணாகரன், மிருதங்கம் கே.கண்ணதாசன், கெஞ்சிரா ஆர்.சிவராம் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக பங்கேற்கவுள்ளனர்.

* * * * *

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தின் ஆன்மீக சிந்தனையுடன் நடத்தும் சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் தினமும் மாலை 3 மணிமுதல் 6 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இதில் 24 ஆம் திருவிழாவான இன்றைய நிகழ்வில் முப்பொருள் தத்துவம் என்ற தொனிப் பொருளில் சைவப்புலவர் கு. சுமுகலிங்கம் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து வேலணை வங்களாவடி ஸ்ரீமுருகன் அறநெறிப் பாடசாலை, மல்லாகம் நீலியம்பனை அறநெறிப்பாடசாலை, நயினாதீவு மலையின் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

# சர்வாதிகார ஆட்சியாளர்கள் மக்களின் அழுத்தம் காரணமாகவே விரட்டியடிப்பு

## மனித உரிமை ஆர்வலர் வெலியமுன தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வாதிகார ஆட்சியாளர்கள் மக்களின் தியாகங்களினால் ஆட்சியை துறக்க நேரிட்டுள்ளதாக மனித உரிமை ஆர்வலரும் சட்டத்தரணியுமான ஜே.சீ.வெலியமுன தெரிவித்துள்ளார்.

பல சர்வாதிகார ஆட்சியாளர்கள் தேர்தல் தோல்விகளினால் விரட்டப்படவில்லை எனவும் மக்களின் அழுத்தம் காரணமாக விரட்டியடிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில சர்வாதிகாரிகளை சர்வதேச சக்திகள் விரட்டியடித்துள்ளன. சிலரை அரசியல் கட்சிகள் வெளியேற்றியுள்ளன.

சில நாடுகளில் ஜனநாயக தேர்தல்களின் மூலம் சர்வாதிகாரிகள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்கின்றனர்.

அநேகமான சர்வாதிகார ஆட்சியாளர்கள் சுய இலாபத்தை முதன்மை நோக்காகக் கொண்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் இறையாண்மையை ஆயுதமாகப் பயன்படுத்திக் கொண்டு சர்வாதிகாரிகள் சர்வதேச தொடர்புகளைப் பேணுவதுடன் தலையீடுகளை தவிர்த்துக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

நவீன சர்வாதிகாரத்தின் பிம்பம் தலைப்பில் ஜே.சீ.வெலியமுனவினால் எழுதப்பட்ட பத்தியொன்றில் இந்த விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

லிபியா, துனிசியாமற்றும்ஏணையஉலகநாடுகளையும் இலங்கையையும் ஒப்பீடு செய்து இந்த பத்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# அரச ஊழியர்களின் இடமாற்றம் தொடர்பில் புதிய திட்டம்

(கொழும்பு)


அரசாங்க ஊழியர்களின் இடமாற்றம் தொடர்பில் புதிய திட்டமொன்றை அமுல்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பதில் பேச்சாளரும் அமைச்சருமான அநுரபிரியதர்ஷன யாப்பா கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பிற்பகல் அரசாங்கத் த்கவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 1589/ 30 செயற்றிட்டத்தின் படி சகல அரசாங்க ஊழியர்களும் இடமாற்றத் திட்டத்துக்கு உட்பட்டவர்களேயாவர். அரசாங்க நிர்வாக சேவை ஊழியர்களும் இடமாற்றம் தொடர்பில் தற்பொழுது திட்டமொன்று அமுலில் உள்ளது.

முறையான இடமாற்றத் திட்டங்கள் இல்லாத அரசாங்க சேவைகளில் புதிய திட்டமொன்றை வகுத்துச் செயற்பட அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று தேர்த் திருவிழா



## நல்லைப் பதிவாழ் கந்தனே

ஆறுமுகனே அலங்காரக் கந்தனே-நல்லை மண்ணின்
கண்காண சீர் மேவும் முருகனே!
வீதியெங்கும் வேப்ப வில்வமரத் தென்றலப்பா
உன தருளோ எம் மக்களுக்கு மன நிறைவப்பா!

கதிர். மகிந்தன்.

## தேரேறும் திருக்குமரா....!

தேரேறி வருகின்றான் செல்வமுத்துக் குமரனிவன்
தேவருக்கும் மூவருக்கும் காவலனாம் கந்தனிவன்
நல்லையிலே குடியிருக்கும் நாயகனே வேல்முருகா
தொல்லைகளைப் போக்கிடுவாய் தொழுகின்றோம் நின்னடியை

ம. நிரோஷனா, கோப்பாய்.

## பக்தியோடு பாடுவேன்!

ஔவைக்கு அருள் புரிய வந்தவனாம் அவன்
ஆடுமேய்க்கும் வேடம்தனைப் பூண்டவனாம்
தமிழர்களின் துயர்துடைக்க வந்தவனாம்
தரணிபுகழ் நல்லூரில் வந்திடுவான்

கவிஞர் செ.பரமநாதன்,
மண்டைதீவு.

## அழகு முருகா! குறை தீர்க்க வா!

அழகிய தேரிலே அம்சமாய் அமர்ந்து
அருளாட்சி புரியும் ஆறுமுகப் பெருமானே!
அடியார்கள் குறை தீர்த்து- அவர்கள் வாழ்வு சிறக்க
அருளை அள்ளி வழங்கும் கந்தப் பெருமானே!
யாழ் மண்ணின் மத்தியில் நல்லூரில் அமர்ந்து
யாவர்க்கும் அருள் வழங்கும் மயில் வாகனனே!
யாவர் குறையையும் நிறைவாக்கி
யாவர் மனதையும் கவர்ந்த அழகுப் பெருமானே!
விரைந்து வா! அருள் புரிய வா!

கு.நிஸாந்தி

## தேரில் முருகன் திருக்காட்சி காண்போமே!

பாரினிலே தீயவற்றை அழித்து நன்மையாம்
சீரதனைச் செய்திடவே வேலுடன் சித்திரத்
தேரினிலே ஆறுமுகம் தோன்றும் காட்சிதனை
நேரினிலே கண்குளிர நல்லையிலே காண்போமே!

நாயன்மார்கட்டு, ப.ம.கேந்திரதாசன்.

## நல்வாழ்வு தாராயோ

நானிலத்தின் காவலனே!
நல்லூரின் நாயகனே
வேலெடுத்து நீ வந்து- எம்
வேதனை தீருமையா!
வடம் பிடித்து நாம் இழுத்தோம்- எம்
வாட்டம் தீருமையா!
நம்பினோம் உனை-எமக்கு
நல்வாழ்வு தாருமையா

மு.கேசவன்
(தொல்புரம்)

# நல்லூர்க் கந்தசுவாமி ஆலய
# தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 2011.08.27






நாய்க்கு நடுக்கடலில் போனாலும் நக்குத் தண்ணிதான்.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அவசரகாலச் சட்டத்தின் நீக்கம் தமிழ் மக்களின் அவலத்தை நீக்காது

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். ஜனாதிபதியின் அறிவிப்போடு அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்குக் காரணமாக இருந்தது நீயா? நானா? என்ற விவாதம் நடந்துகொண்டிருக்கின்றது.

அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நீக்கியமைக்கு உரிமை கோருவதை விட அவசரகாலச் சட்டத்தை நீக்கியதால் தமிழ் மக்களுக்கு நன்மைகள் ஏதேனும் உண்டா என்பதைப் பார்ப்பதே பொருத்துடையதாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை இனப்பிரச்சினை– தமிழர் உரிமை ஆகிய விடயங்களுக்கு சரியான தீர்வைக் கொடுப்பதற்கு சட்டங்களும், நீதிபரிபாலனங்களும் சுதந்திரமாக இயங்கினாலே போதுமானதாகும்.

ஆனால் சட்டங்களும், நீதி பரிபாலனங்களும் இனப் பாகுபாட்டோடு இயங்கினால், எந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தாலும் அல்லது எந்தச் சட்டத்தை நீக்கினாலும் சிறுபான்மைத் தமிழர்களுக்கு அதனால் விமோசனம் கிடைக்கப்போவதில்லை என்பது உறுதி.

அந்த வகையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு விட்டது என்பதனால் தமிழ் மக்கள் நிம்மதியாக உறங்க முடியும் என்று யாரேனும் எண்ணுவார்களாயின் அது மகா தவறு.

சட்டங்களும், நீதி பரிபாலனங்களும் அரசின் நேரடியான அல்லது மறைமுகமான கட்டுப்பாட்டில் இல்லாது சுதந்திரமாக இயங்கும்போதே சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற தத்துவம் அமுலாகும்.

ஆனால், சட்டத்தின் முன் சகலரும் சமம் என்ற நிலைமை இலங்கையில் இல்லாதபோது அவசரகாலச் சட்டத்தின் நீக்கம் பற்றி நாம் அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

அதேநேரம் தமிழ் மக்களின் உரிமை தொடர்பில்– இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில், காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவசரகாலச் சட்டத்தின் நீக்கத்தை பயன்படுத்திக்கொள்ள அரசியல் தலைமைகள் முன்வரவேண்டும்.

அத்துடன் தமிழர் பகுதிகளில் அமைதி நிலையைக் குழப்பக் கூடிய செயற்பாடுகள் அதன் பின்னணி, குழப்பத்தின் மூலம் அடையப்படக் கூடிய இலக்கு என்பன பற்றிய தெளிவான சிந்தனையும் தமிழ்த் தரப்புக்களுக்கு இருப்பது அவசியம்.

இவை யாவற்றிற்கும் மேலாக எந்த விடயத்தையும் காலம் கடத்தாமல் செய்து முடிப்பதென்பது மிகவும் முக்கியமானதாகும்.


இனப்பிரச்சினை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இந்தியாவுக்குச் சென்றுள்ள வேளையில், அங்கு மத்தியில் ஆளும் மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் ஊழல் வியாதியால் துண்டு வெட்டப்படும் நிலையில் இருக்கிறது.

ஆட்சியிலிருப்பது, கேள்விக்குறியாகிவிட்ட நிலையில் காங்கிரஸ் கட்சி எங்களுடைய பிரச்சினையை எப்படி ஆராயும்?

எல்லாம் காலம் கடத்திய வினை. ஆக, அவசரகாலச் சட்டத்தின் நீக்கத்தோடு இனப் பிரச்சினைக்கான தீர்வை இறுக்கிப் பிடிக்காவிட்டால், மீண்டும் அந்தச் சட்டம் அரங்கேறுவதற்கும் வாய்ப்புள்ளது என உணர்வது புத்திசாலித்தனமாகும்.

# தமிழ் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றும் நிலையங்களில் தமிழ் அலுவலர்கள் கட்டாயம்

## அமைச்சர் வாசுதேவ அறிவிப்பு



(கொழும்பு)

தமிழ்–முஸ்லிம் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றும் நிலையங்களில் தமிழ் மொழியில் பணியாற்றக் கூடிய கண்காணிப்பாளர்களை பணியில் ஈடுபடுத்துவது கட்டாயம் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார பரீட்சைகள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

இம்முறை நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் பரீட்சை எழுதிய நிலையங்களில் தமிழ் தெரிந்த கண்காணிப்பாளர்கள் இருக்கவில்லை என மாணவர்களின் பெற்றோர் அமைச்சிடம் முறைப்பாடு செய்திருந்தனர். இது குறித்து ஆராய்ந்த அமைச்சர் வாசுதேவ மேற்படி அறிவித்தலை விடுத்துள்ளார்.

இலங்கை அரசியலமைப்பின் 4 ஆவது சரத்தின்படி பரீட்சைக்குத் தோற்றும் அனைவருக்கும் அவர்களது மொழிகளுக்கு அமைய தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க பரீட்சைகள் திணைக்களம் சட்டரீதியாக கடமைப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதனை மீறியுள்ளமை பாரிய தவறு எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# தமிழ் பிரதேசங்களில் தமிழ் பெண்களையே குறி வைத்து தாக்கும் கிறிஸ் பூதங்கள்

## மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

சட்டமும் ஒழுங்கும் சரியான முறையில் நிலை நிறுத்தப்பட்டால் மக்கள் அதனைக் கையில் எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படாது. கிறிஸ் பூதம் தொடர்பான அநாகரிக செயல்கள் கண்டிக்கப்படத் தக்கதோடு பொறுப்பானவர்கள் பொறுப்புடன் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விடயமாகுமென மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தின் கிறிஸ் பூதம் என்ற பெயரில் நடமாடிய கிறிஸ் பூசிய பூதங்கள் நாட்டின் பல பகதிகளிலும் மர்ம மனிதர்கள் என்ற பெயரில் உலா வருகின்றனர். ஆயினும் தமிழ் பிரதேசங்களில் தமிழ் பெண்களையே குறி வைத்து தாக்கிவரும் இம் மர்ம மனிதர்கள் யார்? மக்கள் தாமாகவே தமக்கு தீங்கு விளைவிக்கும் வதந்திகளை ஏன் பரப்ப வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நாவாந்துறையில் நடந்த சம்பவத்தின் பின் அப்பகுதி மக்கள் பலர் சொந்த வீடுகளுக்கும் இன்றும் திரும்பவில்லை.பெண்கள் திரும்பிச் செல்லவே அஞ்சுகின்றனர். யுத்தத்தின் பின் ஏற்பட்ட சமாதான காலத்தில் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை ஏன் ஏற்பட்டுள்ளது? நாவாந்துறையில் ஏற்பட்ட மர்ம மனிதனின் புரளியால் ஏராளமான ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் தாக்கப்படட்டதுடன் 118 பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டமை அப்பட்டமான மனித உரிமை மீறல் ஆகும். பெண்கள் பலர் அடிகாயங்களுக்குள்ளாகி மானபங்கப்படுத்தப்பட்டமை, பெண்கள் மீண்டும் வீட்டுக்குள் முடக்கி வைக்கும் ஓர் சதியாகவே இது தெரிகின்றது. பாதுகாப்புச் செயலர் மற்றும் இராணுவ அதிகாரிகள் மர்ம மனிதர் இல்லை இவையெல்லாம் அவிழ்த்து விடப்பட்ட கட்டுக்கதை என்கின்றனர்.

மக்கள் பல்வேறு இடங்களில் இவ்வாறான மர்ம மனிதர்களைக் கண்டு அவர்களைத் துரத்தியும் செல்கின்றனர்.

இவர்கள் எல்லாம் பிரமையில் இரவில் ஓடித் திரிகின்றார்களா? இவை எப்படி இருந்த போதிலும் நம்புவோரும் நம்பாதோரும் இரவில் தூக்கமின்றி அவர்களின் அமைதி குலைகின்றது. மக்களைப் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

சட்டமும் ஒழுங்கும் சரியான முறையில் நிலை நிறுத்தப்பட்டால் மக்கள் அதனைக் கையில் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாது.இவ் அநாகரிக செயல்கள் கண்டிக்கப்படத்தக்கதோடு பொறுப்பானவர்கள் பொறுப்புடன் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அங்குலானை இரட்டைக்கொலை 4 பொலிஸாருக்கு மரண தண்டனை

அங்குலானையில் இடம்பெற்ற இரு இளைஞர்களின் கொலை தொடர்பான வழக்கில் அங்குலானை பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரிக்கும் 3 முன்னாள் கான்ஸ்டபிள்களுக்கும் மரண தண்டனையும் 40 வருட கால கடுங்காவல் தண்டனையும் விதித்து கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது.

அங்குலானை பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி விக்கி நியூட்டன், முன்னாள் கான்ஸ்டபிள்களான இந்திரவன்ஸ, குமாரசிறி, தம்மிக நிஹால், முன்னாள் ஊர்காவல் படை வீரர் ஜனபிரிய சேனாரட்ன ஆகியோருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இரு இளைஞர்களை கடத்த சதி செய்தமை, கடத்தியமை, கொலை செய்ய சதி செய் தமை, கொலை செய்தமை ஆகிய 4 குற்றச்சாட்டுக்கள் இந்நால்வர் மீதும் சுமத்தப்பட்டிருந்தன.

இவற்றில் குற்றவாளியாக காணப்பட்ட நால்வருக்கும் கடத்தல், கடத்த சதி செய்தமை ஆகிய இரு குற்றங்களுக்கும் தலா 10 வருட சிறைத்தண்டனையும் கொலை செய்ய சதி செய்தமை, கொலை ஆகிய குற்றங்களுக்கு தலா 10 வருடசிறைத்தண்டனையுடன் மரண தண்டனையும் விதிக்கப்பட்டது.

அத்துடன் தலா ஒரு இலட்சம் ரூபா அபராதமும் இவர்களுக்கு விதிக்கப்பட்டது. அபராதத்தை செலுத்தத் தவறினால் மேலும் இரு வருடகா லம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என நீதிபதி தீர்ப்பளித்தார்.தீபாலி விஜேசுந்தரவை தலைவராகக் கொண்ட நீதிபதிகள் குழாம் இத்தீர்ப்பை அளித்துள்ளனர்.

(ஸ்ரீ-4)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## ஆசி மொழிகள்



✷ பிறருக்குத் தொண்டு செய்வதால் எவர் உடல் அழிகிறதோ, அவர்கள் பாக்கியசாலிகள். இந்த ஒரு பிறவியையாவது தொண்டுக்காகப் பயன்படுத்துங்கள். வேதாந்தம் தத்துவ சித்தாந்தங்களை அடுத்த பிறவியில் கற்றுக் கொள்ளலாம்.

✷ அரிய செயல்களைச் செய்பவர்கள் தனக்கென்று எந்த உரிமையையும் கேட்பதில்லை. உதவாக்கரை மனிதர்களே தனக்கென இலாபம் என்று சிந்தித்துக் கொண்டிருப்பர்.

✷ கடவுள் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ கண்முன் இருக்கும் கடமைகளைச் செய்யுங்கள். இது ஒன்றே ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டிய முதல்பாடம்.

✷ தன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் சுய நலம்தான் மிகப்பெரிய பாவம். மற்றவர்களுக்கு முன் முக்திபெற வேண்டும் என்று நினைப்பது கூட சுயநலம்தான்.

✷ தவறு செய்யாதவர் யாருமில்லை. ஆனால், தவறை மீண்டும் செய்வது கூடாது. செய்த தவறை மற்றவர்கள் மிகைப்படுத்தும் முன்னால் அதை ஒத்துக் கொள்வது உயர்ந்த பண்பு.

✷ அடக்கம் இல்லாத மனமே ஒருவனது கொடிய பகைவன். ஒரு முகப்பட்ட மனமே உற்ற நண்பன்.

அவசர நிதித் தேவைகளுக்கு உடனடி சிநேகபூர்வ சேவை

செலான்
தங்க நகை
அடகுச் சேவை

அதிக பணம்
குறைந்த வட்டி
கூடுதலான பரிசுகள்





1.125%

24k 41,000/-
22k 36,500/-

மேலதிக விபரங்களுக்கு
அழைக்கவும் 011 200 88 88

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

www.seylan.com



கனவு நனவாகிடும்
வியாபாரம் ஓங்கிடும்
செல்வம் பெருகிடும்
இவை அனைத்தும்
நேஷன்ஸ் லீஸிங் மூலம் கிடைத்திடும்


உங்கள் எண்ணங்களை நிறைவேற்றும் லீஸிங் பங்காளி

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம்
உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணங்களை இலகுவாகவும்
சிறந்த கொடுப்பனவு முறையிலும் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.

அருகிலுள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியை நாடுங்கள்
அழையுங்கள்: (011) 4 791 777
(011) 4 218 218
www.nationstrust.com
Nations Trust Bank PLC - PQ 118

Nations Trust Bank
Nations Leasing

www.sagittarius.lk



நல்லூர்
கந்தசுவாமி
அருளும்!!!

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
பாதுகாப்பும்!!!

முருகன் அருள் வேண்டி நாடு பூராவிருந்தும்
ஆயிரக் கணக்கான பக்தர்கள் வருகை தரும்
அருள்மிகு நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த
திரு விழாவிற்கு ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
நல் வாழ்த்துக்கள்...

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

# இலங்கைக்கு இலஞ்சம் வழங்கி ஒப்பந்தங்களை பெற்ற சீனா

## விக்கிலீக்ஸ் தகவல் வெளியீடு

இலங்கையில் ஒப்பந்தங்களை, குறிப்பாக அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான ஒப்பந்தங்களை பெறுவதற்காக இலங்கை அதிகாரிகளுக்கு சீன அதிகாரிகள் லஞ்சம் வழங்கியதாக அமெரிக்கா நம்பியது என்பது பரபரப்பு இணையத்தளமான விக்கிலீக்ஸ் வெளியிட்ட, அமெரிக்க தூதரகத்தின் கேபிள் குறிப்பொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

ஊழலும் அரசியல் ஆதரவும் அம்பாந்தோட்டையில் கவனம் செலுத்துவது முக்கிய விடயங்களாக இருந்திருக்க வாய்ப்புள்ளது. சீனக்கம்பனிகள் ஒப்பந்தங்களை வெல்லுவதற்கு இலங்கை அரசாங்க அதிகாரிகளுக்கு பரந்தளவான லஞ்சம் விநியோ கிப்பது அடிக்கடி காரணமாக உள்ளது.

அம்பாந்தோட்டை அபிவிருத்தியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எந்தளவு ஈடுபாட்டை கொண்டுள்ளார் என்பது தெரியாவிடினும் வர்த்தக நிறுவனங்கள், குறிப்பாக சீனர்கள் ஒப்பந்தங்கள், திட்டங்களுக்காக போட்டியிடும்போது அவரின் கையும் அதில் பங்குபற்றும் என்பது தர்க்க ரீதியானதாக தென் படுகிறது என விக்கிலீக்ஸினால் கசிய விடப்பட்டுள்ள அமெரிக்க தூதரகத்தின் கேபிள் தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விக்கிலீக்ஸ் வெளியிட்ட அமெரிக்க கேபிள் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதா வது, அம்பாந்தோட்டை பிராந்தியத்தில் இது வரை தனியார் முதலீடுகள் இல்லை. அம்பாந்தோட்டை ஆனது கொழும்புக்கு தொலைவில் தெற்கில் அமைந்துள்ளது.அதற்கரு கில், குறிப்பிடத்தக்க கைத்தொழில் நிறுவனங் கள் இல்லை. எனவே குறைந்த பட்சம் ஆரம்பத்தில் உள்ளூர் ஏற்றுமதி இறக்கு மதியினால் அம்பாந்தோட்டை நன்மையடையப் போவதில்லை.

பின்னர் தனியார் முதலீடுகள் வரக்கூடுமாயினும் அம்பாந்தோட்டை திட்டம் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுகிறது. சீனா மற்றும் வெளிநாட்டு உதவிகளுடன் அம்பாந்தோட்டையை துரிதமாகவும் தீவிரமாகவும் அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம், இலங்கை துறைமுக அதிகார சபை, நகர அபவிருத்தி அதிகார சபை ஆகியன முனைகின்றன.

இலங்கை அரசாங்கத்தின் பெருந்திட்டம் பூர்த்தியானவுடன் புதிய துறைமுகம், சர்வதேச விமான நிலையம்,ரயில் இணைப்புகள், வீதிகள் மற்றும் உட்கட்டமைப்புகள் என்பன இருக்கும். இவ்வளவுக்கும் மத்தியிலும் அண்மைக் காலத்தில் குறிப்பிடத்தக்களவு வர்த்தக முதலீடுகளுக்கான சாத்தியங்கள் தென்படவில்லை. இந்த சர்வதேச விமான நிலைய மானது விசேட விமானப் பயணங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படும் என்றுள்ளது.(எ-5)

# தமிழரின் அடையாளத்தை அழிக்க அரசு நிகழ்ச்சிநிரல் தயாரித்துள்ளது

## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் டில்லியில் தெரிவிப்பு

தமிழ் மக்களின் தனித்துவமான அடையாளத்தை மழுங்கடிக்க அரசு தனது நிகழ்ச்சி நிரலை மேலும் வலுப்படுத்தியுள்ளது என அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் பொதுச் செயலாளர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, மேற்கத்திய குடியேற்றவாத ஆட்சி 1948 ஆண்டில் முடிவுற்ற காலந் தொட்டு, தமிழ் மக்கள் இலங்கைத்தீவின் ஆட்சியதிகாரத்தை பகிர்ந்து கொள்வது தொடர்பான அடிப்படைகள் பற்றி இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி வந்திருக்கின்றனர்.

ஒன்றன்பின் ஒன்றாக அதிகாரத்துக்கு வந்த பற்பல அரசுகள், அதிகாரக் கையளிப்புத் திட்டம் ஒன்றைக்கூட சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்ற காரணத்தைக்கூறி, தமது சிங்கள பெரும்பான்மைப் பலத்தை பிரயோகித்து, அவ்வரசுகளோடு மேற்கொள்ளப்பட்டு வந்த பேச்சுவார்த்தைகளை மட்டுமன்றி ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களையும் தோல்வியடையச் செய்தன. இவ்வாறான அறுபதாண்டு அனுபவம் முற்றும்முழுதாக மீண்டுமொருமுறை கடந்த ஓராண்டில் பரீட்சிக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு மே மாதத்தில் யுத்தம் முடிபுற்ற வேளையில் இருந்து தமிழ் மக்களின் தனித்துவமான அடையாளத்தை மழுங்கடிப்பதற்கான தனது நிகழ்ச்சிநிரலை இலங்கையரசு மேலும் வலுப்படுத்தியுள்ளது. தமிழரது மொழி, கலாசார, சமூக மற்றும் சமய அடையாளங்களையும் பொருளாதார வாழ்வையும் அழித்தொழிப்பதற்கும் வட-கிழக்கில் ஏற்படுத்தப்பட்டுவரும் பலாத்கார சிங்களக் குடியேற்றத்திற்கும் வட-கிழக்கில் இன்று நிலவும் இராணுவப் பிரசன்னம் தீவிரமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தனித்துவமானதொரு இனமான தமிழர்களின் இருப்பை அழிப்பதே இத்திட்டத்தின் இறுதி இலக்காகும்.

இந்தப் பின்னணியில், இலங்கைத் தீவிலுள்ள தமிழ் மக்கள் தனியொரு இனமான தமது இருப்பையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு ஏதுவாக அவர்களை ஒரு தனித்துவமான தேசம் எனவும் அவர்கள் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையவர் எனவும் அங்கீகரிப்பது இன்றியமையாததொன்று என்பது எங்கள் வலுவான கருத்தாகும்.

அவ்வாறானதொரு சூழ்நிலையில் மட்டுமே இலங்கை அரசுடனான எந்தவொரு பேச்சுவார்த்தையும் அர்த்தமுள்ளதாக அமைய முடியும். ஆதலால் தமிழ் தேசம் முன்வைக்கும் இந்த உரிமைக் கோரிக்கையை அங்கீகரிக்குமாறும் ஒரே நாட்டினுள் எட்டப்படத்தக்க எந்தவொரு தீர்வுக்கும் இதுவே அடிப்படையாக அமையுமென இடித்துரைக்குமாறும் நாங்கள் இந்திய நாட்டிடமும் அனைத்துலக சமூகத்திடமும் விண்ணப்பம் கொள்கிறோம் என்றுள்ளது. (ஏ)

# கணவனை சந்திக்க அனுமதிகோரி நளினி மனுத் தாக்கல்!

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள தனது கணவர் முருகனை ச் சந்திக்க வேண்டும் எனக் கோரி நளினி சிறைத்துறைக்கு மனுத்தாக்கல் செய்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நளினி, முருகன், சாந்தன்,பேரறிவாளன் ஆகியோருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இவர்களில் நளினிக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

வேலூர்மகளிர்சிறையில்நளினியும், ஆண்கள் பிரிவில் முருகனும் அடைக்கப்பட்டனர். கடும் சட்டப் போராட்டத்திற்குப் பின்னர் 15 நாட்களுக்கு ஒரு முறை இருவரும் சந்தித்துக் கொள்ள நீதிமன்றத்தின் அனுமதியையும் அவர்கள் பெற்றுக் கொண்டனர்.

ஆனால், கடந்த தி.மு.க ஆட்சியின் இறுதிக் காலத்தில், நளினி மீது திடீரென பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து அவர் சென்னை புழல் சிறைக்கு மாற்றப்பட்டார். இதனையடுத்து கடந்த எட்டு மாதமாக கணவரைப் பார்க்காமல் நளினி பிரித்து வைக்கப்பட்டிருந்தார்.

இந் நிலையில், முருகனுக்கு தற்போது தூக்குத் தண்டனை உறுதி செய்யப் பட்டுள்ளது. அவருக்குதூக்குத் தண்டனையை நிறைவேற்றலாம் என மத்திய உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இதையடுத்து தனது கணவரைச் சந்திக்க அனுமதிக்க வேண்டும் என்று கோரி நளினி சிறைத்துறை அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். நளினியின் இக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், இக் கோரிக்கை தொடர்பில் சிறைத் துறை அதிகாரிகளிடம் இருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரியவருகின்றது.(ச-5)

# தமிழர்களு...

குற்றச் செயல் தொடர்பான விசாரணைகள் யதார்த்தமற்றவை எனவும் அவை பாதகமான விளைவினை ஏற்படுத்தக்கூடும் எனவும் இலங்கை வாழ் தமிழர்கள் கருதுவதாக புட்டினஸ் தெரிவித்துள்ளார்.

யுத்தக்குற்றச்செயல் விசாரணைகளை வலியுறுத்துவதன் மூலம் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடலாம் என இலங்கை தமிழ் அரசியல்வாதிகள் கருதுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமூகம் இந்த விட யத்தில் காத்திரமான பங்களிப் பினை வழங்க வேண்டும் என்பதே பலரின் கருத்தாக அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-5)

# ஜப்பானிய...

ஜப்பானியா நிதியமைச்சர் யஷிஹிகோ நோடா,வர்த்தக அமைச்சர் பான்றீ கயீடா, விவசாய அமைச்சர் மிசிஹிகோ கனோ, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் செய்ஜி மயீஹறா ஆகியோர் அடுத்த பிரதமராக தெரிவாகக்கூடிய வாய்ப்புள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர். (ச-5)

# “தற்கொலை செய்து கொள்வோம்”

## பேரறிவாளனின் தந்தை தெரிவிப்பு

தனது மகன் பேரறிவாளன் உயிரை விடுவதற்கு முன்பே தான் தனது குடும்பத்துடன் வேலூர் சிறைச்சாலைக்கு முன்பாக தற்கொலை செய்து கொள்வேன் என பேரறிவாளனின் தந்தை குயில்தாசன் அறிவித்துள்ளார்.

அத்துடன், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மூவரையும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா காப்பாற்ற வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பேரறிவாளன்,முருகன் மற்றும் சாந்தன் ஆகிய மூவரையும் தூக்கில் இடுவதற்கான திகதி குறிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் நேற்று போராட்டங்கள் வலுத்துள்ளன.

இந்நிலையில், வேலூர் மாவட்டம் ஜோலார் பேட்டையில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்ட உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்ட போதே பேரறிவாளனின் தந்தை குயில்தாசன் அவ்வாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்; சாதாரண பொம்மைகளில் பயன்படுத்தப்படும் பற்றரியை வாங்கிக் கொடுத்ததற்கா எனது மகனுக்கு தூக்குத் தண்டனை விதித்துள்ளனர் இது என்ன அநியாயம்? செய்யாத குற்றத்திற்காக எனது மகன் 21 வருடமாக சிறையில் வாடி வருகி றான்.

எனது மகன் உயிரை விடுவதற்கு முன்பே நானும், எனது குடும்பத்தினரும் வேலூர் சிறைச்சாலை முன்பாக தற்கொலை செய்து கொண்டு மாண்டு போவோம்.

முதலமைச்சர் ஜெயலலிதா அம்மா தான் எனது மகனை காப்பாற்றி என்னிடம் தர வேண்டும். அவரால் தான் இது முடியும். அவரைத்தான் நாங்கள் நம்பியுள்ளோம் என கண்ணீர் மல்கத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கோவையில் சட்டக்கல்லூரி மாணவர்கள் இன்று மாவட்ட ஆட்சித் தலைவரை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியுள்ளனர்.

அதுபோன்று,சென்னை கோட்டை தொடருந்து நிலையத்தில் தாம்பரம் செல்லும் மின்சார தொடருந்தை சட்ட மாணவர்கள் தடுத்துபோராட்டம் நடத்தியுள்ளனர். இதே போல சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞர்களும் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


# நிலைமைகளை ஆரா...

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப் பாணத்தின் படைத் தலைமையகத்துக்கும் விஜயம் செய்த அவர், படைத் தரப்பின் யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துரு சிங்கவுடன் பாதுகாப்பு நிலைமை கள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து தெல்லிப்பழை, கீரிமலை மற்றும் காங்கேசன்துறைப் பகுதிகளுக்கு விஜயம் செய்த கோத்தபாய ராஜபக்ஷ அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

அத்துடன் படைத்தரப்பினரால் 90 ஏக்கர் நிலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மரக் கறிப் பயிர் செய்கை பண்ணைக்கும் அவர் விஜயம் செய்துள்ளார்.

அதேவேளை யாழ்.கோட்டை மற்றும் பருத்தித்துறை உட்பட குடா நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு நேற்று விஜயம் செய்த கோத்தபாய ராஜபக்ஷ படையதிகாரிகளுடன் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்ந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-5)



சனத்திரளின் மத்தியில் முருகப்பெருமான் நேற்று சப்பறத்தில் உலாவருவதையும் சப்பறத்தில் வள்ளி, தெய்வானை சமேதராக முருகப் பெருமான் வீற்றிருப்பதையும் கரகாட்டம் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.
MAHARAJA FOOD PRODUCT
கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
aramex delivery unlimited
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha, Wellawathte.
T.P:-0112360926,0112259849
யாழ்ப்பாணம்
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

# இலங்கைக்கு அமெரிக்கா...

இது குறித்து அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது.

எதிர்வரும் 31ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கவுள்ள றொபேர்ட் ஓ பிளேக் அரசியல் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள், சமூகப்பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன் அவர் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்து நிலைமைகளை அவதானிக்கவுள்ளார்.

அவசர காலச்சட்டத்தை நீக்குவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிவிப்பை அமெரிக்கா வரவேற்கின்றது. இது இலங்கையில் வாழ்கின்ற மக்களுக்கு சாதகமானதாக அமையும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இதனால் றொபேர்ட் ஓ பிளேக் இலங்கைக்கு மேற்கொள்ளவுள்ள விஜயம் நல்லதாக அமையும் என்று கருதுகின்றோம்.

அவசரகாலச்சட்டம் மற்றும் அது தொடர்பான விவகாரங்கள் குறித்து இலங்கையின் அரசாங்கத்தரப்பு, அரச சார்பற்ற நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புக்களின் கருத்துக்களை அவர் அறிந்து கொள்வார்.

சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்களின் நியமங்களுக்கு மதிப்பு அளிக்குமாறு அரசாங்கத்தை அமெரிக்கா மீண்டும் கேட்டுக்கொள்கின்றது.

அமெரிக்கா தொடர்ச்சியாக கூறிவருகின்ற ஆலோசனைகளை இலங்கை அரசாங்கம் கருத்தில் கொள்ளாது விட்டால் சர்வதேச சமூகம் அதற்கான நடவடிக்கையில் இறங்க வேண்டிய நிலை ஏற்படும்.

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள றொபேர்ட் ஓ பிளேக் இவ் விவகாரங்கள் குறித்து ஆராய உள்ளார் என அமெரிக்க ராஜாங்கத்திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள றொபேர்ட் ஓ பிளேக்கை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாக கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். (ச-5)

# நாவாந்துறையில் கைது...

இந்த தாக்குதல் சம்பவத்தையடுத்து இராணுவத்தினர் தலையிட்டு பொதுமக்களை சரமாரியாக தாக்கியதோடு நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்த நூறு ஆண்களை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களில் பலர் படுகாயமடைந்திருந்தோடு வயோதிபர்களாகவும் இருந்தனர். கைது செய்யப்பட்ட அனைவரும் மறுநாள் 23ஆம் திகதி காலை யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

குறித்த வழக்கை விசாரித்த யாழ்.மாவட்ட நீதிபதி ஏ.பிறேம்சங்கர் நேற்றுவரை வழக்கை ஒத்திவைத்ததோடு காயம் அடைந்த அனைவரையும் மருத்துவ பரிசோதனையின் பொருட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்குமாறு உத்தரவிட்டார்.

மருத்து பரிசோதனை முடிபுற்ற நிலையில் நேற்று 91 பேர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். ஏனைய 9 பேரும் உடல் நிலை குணமடையாததன் காரணமாக தொடர்ந்து வைத்திய சாலையிலேயே சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்கள் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட 91 பேரையும் பிணையில் செல்ல அனுமதித்ததோடு இந்த வழக்கை அடுத்த மாதம் 6ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்.

இவர்களுக்கு வழங்கப்பட்ட பிணையில்5000 ரூபாய்ஆட்பிணையிலும் 5000 ரூபாய் தமது சொந்த பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு வழக்கு ஒத்திவைக்கப்பட்ட காலம் வரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 9.00 மணிக்கும் மாலை 4.00 மணிக்கும் இடையில் நீதிமன்றில் ஆஜராகி கையொப்பம் இட வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டார்.

அத்தோடு வைத்திய சாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவரும் 9 பேரையும் அடுத்த வழக்கின் தவணை வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

இதுதவிர நாவாந்துறை பகுதியில் கலவரம்நடந்த இடத்தை நீதிபதி நேற்று பிற்பகல் 2.30 மணி அளவில் நேரில் சென்று பார்வையிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-6)

வேலையாள் தேவை
கோழிப்பண்ணையில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடியவர் தேவை.
வயதெல்லை :35-50
ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:0771341795, 0217200616
(5997)

நல்லூர் சிறப்பு விற்பனை நிலையத்தில்
கற்குமி வெளியீடு
விலை 10 /= மட்டுமே
(பின்வீதியில்அமைந்துள்ளது)

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகள்...

கருணை மனுக்களை இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் அண்மையில் நிராகரித்ததை தொடர்ந்து இம் மூவரையும் காப்பாற்றக்கோரி தமிழகத்தில் போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

அத்துடன் இவ் விவகாரத்தில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தலையிட்டு இம் மூவரின் மரண தண்டனையையும் நிறுத்த வேண்டும் எனவும் தமிழகத்திலும், சர்வதேச ரீதியாகவும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் இவர்களின் கருணை மனுக்கள் இந்திய ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறித்து தமிழக அரசு ஊடாக வேலூர் சிறைக்கண்காணிப்பாளருக்கு மத்திய உள்துறை அமைச்சு அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

விதிமுறைப்படி மரண தண்டனையை நிறைவேற்றலாம் என்ற உத்தரவு வந்த 7 நாட்களுக்குள் தண்டனைக்கு உரியவரை தூக்கில் இட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் செப்ரம்பர் 9 ஆம் திகதி இம் மூன்று பேரும் தூக்கிலிடப்படவுள்ளதாக வேலூர் சிறை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரிடமும் முதற்கட்டமாக அவர்களின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்ட தகவலை முறைப்படி தெரிவித்து வேலூர் சிறை அதிகாரிகள் அதன் பின்னர் அவர்களை தூக்கிலிடும் திகதியையும் சிறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடிவரும் இவ் மூவருக்கும் தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் படி மத்திய உள்துறை அமைச்சு அறிவித்துள்ளமை தமிழ் உணர்வாளர்களை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளதுடன் பெரும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை இவ் மூவரும் தூக்கிலிடப்படவுள்ளதை தொடர்ந்து வேலூர் சிறைச்சாலையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ச-5)

SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE
டிப்ளோமா சான்றிதழுடன் பேச்சுமொழி ஆங்கிலம்
புதிய பிரிவு ஆரம்பம் : 28.08.2011 ஞாயிறு 12.30 - 2.00
இவ்வகுப்பில் கலந்துகொள்வோர் அதன்பின் ஒரு மாத வாரநாள் (திங்கள்-வெள்ளி) மற்றும் 3 மாத வார இறுதி (சனி, ஞாயிறு) வகுப்புக்களில் இணைந்து பயிற்சிபெறலாம்
வார வகுப்பு - 1 மாதம் சனி, ஞாயிறு வகுப்பு - 3 மாதம்
ஆங்கிலம் கதைக்க மற்றும் பரீட்சைகளில் தேர்ச்சி பெற விரும்பும் ஒவ்வொருவரும் கண்டிப்பாக பயிற்சிபெற வேண்டிய பயிற்சிநெறி
MyWay 182 1/5, STANLEY ROAD, JAFFNA
077 33 63 456 021 222 9505

நல்லைக் குமரனின் இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துகிறோம்
இந்தியன் சீக்குன்ஸ் சாறி, கொட்டன் சாறிகள், திருமணப் பட்டுப்புடைவைகள் , பஞ்சாபிகள், ஆண்களுக்கான ஆடைகள் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான சகலவித புடைவைகளுக்கு நாடவேண்டிய இடம்
TOPAZ
NO.70, GRAND BAZAAR, JAFFNA.
TEL: 021-222 4743

வாழ்க்கையில் வசந்தம் உருவாக நல்லூர் கந்தனை வேண்டுகின்றோம்
இலங்கையின் தலைசிறந்து விளங்கும் முன்னனியான நிறுவனம்
World Express Services
உலக நாடுகளுக்கான துரித பொதிகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப எங்களை நாடுங்கள்
கிளை: 227, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2220356
(இந்திய தூதரகத்திற்கு அருகாமை)
தலைமை அலுவலகம்: 338, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு -15 தொ.பே: 0112520894
கிளை: 180/5 புகையிரத நிலைய வீதி, வைரவ புளியங்குளம்,வவுனியா தொ.பே: 024 490 3200
E.Mail: Worldexpress.ser@gmail.com www.worldexpressservices.com

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.